விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 02 சனிக்கிழமை (14.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜனாதிபதியின் மனித உரிமைச் செயற்பாடுகள் போலியானவை; அவை மக்களை ஏமாற்றுபவை!

## புட்டு வைக்கிறார் மகிந்தவின் முன்னாள் நண்பர்



(சென்னை), ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனித உரிமை செயற்பாடுகள் போலியானவை. அது மக்களையும் அவரோடு பணியாற்றிய மனித உரிமையாளர்களையும் ஏமாற்றும் செயல். இவ்வாறு மனித உரிமை ஆர்வலர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பேரவையில் உரையாற்றி அமெரிக்கத் தீர்மானம் நிறைவேறிய பின்னர், சென்னைக்கு திரும்பிய நிமல்கா பெர்னாண்டோ, இலங்கைக்குமீண்டும்வரமுடியவில்லை.

சென்னையில் தங்கியிருந்த இவர், யூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவரின் செவ்வி இங்கு கேள்வி பதிலாகத் தரப்படுகின்றது.

**கேள்வி:** ஒரு காலத்தில் நீங்கள் ராஜபக்ஷவின் நண்பராக இருந்தவர் தானே... உங்களுக்கே இப்போது நெருக்கடியா?

**பதில்:** ஆம்.ஆனால் நண்பரா... இல்லையா என்பதை அவர்தான் சொல்ல வேண்டும்.

என்னுடைய நண்பர் இப்படித் தலைகீழாக மனித உரிமைகளை காலில் போட்டு மிதிக்கும் ஒரு நபராக (19ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியக் குழுவின் இலங்கை விஜயம் குறித்து மறுபரிசீலனை

## அ.தி.மு.கவின் முடிபால் இந்தநிலை

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இருந்து அ.தி.மு.க. விலகிக் கொண்டமை மத்திய அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இக்குழுவில் இருந்து அ.தி.மு.க விலகிக் கொண்டதால் இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் மாற்றங்கள் ஏற்படலாம் என இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் நிலைமைகள், போருக்கு பிந்திய புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிடுவதற்காக இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இக்குழு அமைந்திருக்கும் எனக் கூறப்பட்டிருந்த போதிலும், இக்குழுவுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதில் பல்வேறு குழப்பங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மக்களைவையின் எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அருகே புதிய புவித் தட்டு

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவின் வட பகுதியின் மேற்கு கரையில் கடந்த 11 ஆம் திகதி 8.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது புவி சிறு தட்டுக்களில் அதிர்வு ஏற்பட்டது. இருந்தபோதும் சுனாமி பேரலைகள் தோன்றவில்லை. இதற்கு புவித் தட்டுக்களில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதே காரணம் என இங்கிலாந்து புவியியல் நிபுணர் ரொகர் மியூசன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட பெரும்பாலான நிலநடுக்கங்களால் நிலைமை மாற்றம் அடைந்துள்ளது. இதனால் தான் (20ஆம் பக்கம் பார்க்க)

# பிரான்ஸுக்கான தூதுவர் தயானை நாடு திரும்புமாறு அரசு பணிப்பு!



(கொழும்பு)

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலகவை உடனடியாக நாடு திரும்புமாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் ஜனநாயக மறுசீரமைப்பு ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் மியன்மாரிடம் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ள முடியும் என தூதுவர் தயான் ஜெயதிலக கூறியிருந்தார்.

அவரின் இக் கருத்தால் ஆத்திரமடைந்த இலங்கை அரசு அவரை உடனடியாக நாடு திரும்புமாறு பணித்துள்ளது. (ந-8,11)

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற தமிழ்-சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும்....



# கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய நூலகத்திற்கு அருகாமையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரொக்கட் குண்டுகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால பயன்பாட்டை நோக்காகக் கொண்டு, புலிகள் இந்த ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கக் கூடும் என தெரிவிக்கப் படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங் (20ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் மகிந்த அரசுக்கு எதிராக மக்கள் போராட வேண்டும்

## - விக்கிரமபாகு கருணாரட்ண

இலங்கை மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டையாகவே மகிந்த அரசு செயற்படுகின்றது. இதற்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட முன்வர வேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் தெகிவளை, கல்கிசை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

பிறந்துள்ள தமிழ்-சிங்கள புத்தாண்டு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் சிங்கள புத்தாண்டு பிறந்துள்ளது. பொருட்கள் சேவைகளின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் வாழ்க்கைச் சுமை அதிகரித்து மக்கள் வாழ்வதற்கு வழியின்றி திண்டாடும் இவ் வேளையில் புத்தாண்டு பிறந்துள்ளது.

இந்த அவல வாழ்க்கையில் தமிழ், சிங்கள மக்கள் புத்தாண்டை எப்படிக் கொண்டாடுவது?

நாட்டின் எதிர்காலத்தைப் படுபாதாளத்தை நோக்கி அழைத்துச் சென்றது தற்போது ஆட்சியில் இருக்கும் மகிந்த அரசுதான். இந்த



மகிந்த அரசின் ஆட்சிக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை செல்லும் இந்தியக் குழுவில் ம.தி.மு.க. இடம்பெற விரும்பவில்லை



(சென்னை)

இலங்கை செல்லும் இந்திய நாடாளு மன்ற குழுவில் இணைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் (ம.தி.மு.க.) விரும்பவில்லை என ம.தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து வெளியாகும் நக்கீரன் வார இதழுக்கு வழங்கிய செவ்வியில், கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் இலங்கை செல்லும் நாடாளுமன்றக்குழு பட்டியலை இந்திய அரசு இன்னும் இறுதி செய்யவில்லை.

ஆனாலும் அதில் ம.தி.மு.கவுக்கு இடம் இல்லையென்று டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு வேளை தங்களை அணுகி அக்குழுவில் இடம்பெறவேண்டினாலும் அதில் இடம்பெற ம.தி.மு.க. விரும்பாது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சென்று தான் தமிழர்களின் நிலையை ஆராய வேண்டிய தேவையில்லை அங்கு இடம்பெற்ற, இடம்பெறுகிற இனப்படு கொலை தொடர்பாக பல ஆதாரங்கள் ஒளி வடிவிலும் நிழற்பட வடிவிலும் கிடைக்கப் பெற்றன.

எனினும் இலங்கை தொடர்பாக இந்திய அரசு மௌனம் காத்து வந்துள்ளது. இலங்கையை துணிச்சலாக கண்டிக்காத இந்திய அரசு, இன்று தமிழர்களை ஏமாற்றவே இப்படியொரு நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவே நாங்கள் சந்தேகிக்கின்றோம்.

இலங்கை அரசுக்கு எதிரான கருத்துக்களை வைத்திருக்கும் எந்தவொரு கட்சியையும் சேர்த்துக்கொள்ள இந்திய அரசு விரும்பவில்லை.

சி.பி.ஐ., விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகள் பயணக்குழுவில் தங்களையும் இணைத்துக்கொள்ளும்படி கடிதம் அளித்தும் அவர்கள் இணைக்கப்படவில்லை. நாடாளுமன்றக் குழுவின் பயணத்திட்டங்கள் கூட போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட வாய்ப்பில்லாதவாறு அமைக்கப்பட்டுள்ளதை பார்க்கும் போது இந்தத்திட்டத்தை இலங்கை அரசுடன் கை கோர்த்து இந்திய அரசு வடிவமைத்துள்ளதாகவே சந்தேகிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஐ.நா. தீர்மானம் தொடர்பான கேள்விகளுக்கு, அத்தீர்மானத்தால் எந்தவொரு நன்மையும் நேராது என்பது தான் ம.தி.மு.கவின் நிலைப்பாடு. தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக எந்தவித தாக்கமும் இல்லாதவாறு தீர்மானம் அமையுமாறு இந்தியா பாதுகாத்தது அனைவரும் அறிந்ததே! இதுவே ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு மேலும் அதிக துணிச்சலை வழங்கியிருக்கிறது.

போரை நடத்த பேருதவி செய்த இந்திய அரசு இலங்கையை சர்வதேச சமூகத்தின் பார்வைகளில் இருந்தும் காப்பாற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது என்பதும் அனைவரும் அறிந்ததே. யதார்த்தம் இப்படியிருக்க தீர்மானத்தின் பரிந்துரைகளை ஜனாதிபதி ராஜபக்ஷவும் நிறைவேற்றப்போவதில்லை. இந்தியாவும் வற்புறுத்தப் போவதில்லை என தெரிவித்தார். (ந-8,11)

## யாழின் அபிவிருத்திக்கு ரூ.5240 மில்லியன் தேவை

யாழ்.மாவட்டத்தின் மீள்குடியேற்றம், வீடமைப்புத் திட்டங்கள் போன்றவற்றிற்காக சுமார் 5 ஆயிரத்து 240 மில்லியன் ரூபாய் நிதி தேவையென மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

மாவட்டத்தின் மீள்குடியேற்றம், பொருளாதார மேம்பாடு, சமூக அபிவிருத்தி, விவசாயம், மீள்கட்டுமானம் போன்றவற்றிற்காகவே இந்த நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மீள்குடியமர்வு மற்றும் புனரமைப்பு வசதிகளுக்காக சுமார் 5 ஆயிரம் வீடுகளின் புனரமைப்பிற்கும், 2 ஆயிரம் வீடுகளின் பகுதியளவு சேதத்தை திருத்திக் கொள்வதற்கும் சுமார் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய் தேவை.

விவசாயத்துறையின் கீழ் புனரமைக்கப்பட வேண்டிய 33 சிறிய குளங்களின் புனரமைப்பிற்கு 35 மில்லியன் ரூபாய் நிதி தேவை, மீள்கட்டுமானத்தின் கீழ் ஆயிரத்து 665 மில்லியன் ரூபாவும், போதனா வைத்திய சாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் கண்சத்திர சிகிச்சை பிரிவு, பொது சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் புனரமைப்பிற்காக 900 மில்லியன் ரூபாயும் தேவை.

மேலும் நிர்வாகத்துறையின் கீழ் 110 மில்லியன் ரூபாய் நிதியும் தேவையாகவுள்ளதாகவும், இதற்கென அரச துறை நிதி கிடையாதெனவும் மாவட்டச் செயலகம் தெரிவித்திருக்கின்றது. (ந-8,11)

## பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் மியான்மருக்கு விஜயம்

(நேபைரோ)

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மியான்மர் தலைநகர் நேபைரோச் சென்றடைந்துள்ளார்.

அவர் மியான்மார் ஜனாதிபதி தீன்சீனை சந்தித்து உரையாடியுள்ள நிலையில், ஜனநாயக தலைவர் ஆங்சான் சூ கீயை ரங்கூனில் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 வருட கால இடைவெளிக்குப் பின்னர், முதன்முறையாக பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் மியான்மாருக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய பிரிட்டிஷ் பிரதமர், ஜனநாயக நடவடிக்கைகள் உறுதியான முறையில் மியான்மாரில் நடைபெறுவதனை ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த சுமார் 50 வருடங்களாக மியான்மாரில் ஆட்சியாளர்கள் கடுமையான இராணுவ ஆட்சியினையே அங்கு அமுல்படுத்தி வந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க மற்றும் சில நாடுகள் மியான்மாருக்கு எதிராக பொருளாதார தடையினை விதித்திருந்தது.

இந்த நிலையில், 20 வருடங்களுக்கு பின்னர் இடம்பெற்ற தேர்தலையடுத்து, அரசியல் கைதிகளை விடுவித்தல் மற்றும் எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகளுக்கான சந்தர்ப்பம் என்பனவற்றிற்கு, மியான்மார் அரசாங்கம் இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் பத்து கடவுச் சீட்டுக்களுடன் கைது

(கொழும்பு)

கிளிநொச்சியைச் சேர்ந்த 22 வயதான இளையரொருவரை பத்து கடவுச்சீட்டுக்களுடன் சிலாபத்தில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிட மிருந்து வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகக் கூறி, பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடவுச்சீட்டுக்களும் ஜேர்மன் நாட்டுக்கான ஐந்து விமா ன பயணச்சீட்டுக்களும் கைப்பற் றப்பட்டன.

கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)

## கொக்கி நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சை இன்று

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சை இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.


இப் பரீட்சைக்கு உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

பரீட்சைகளைத் தொடர்ந்து 4 மணிக்கு யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதில் அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-11,24)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 26 . 08 . 1962



ஆண்டவன் அடியில் 15 . 03 . 2012

**அமரர் யாக்கோப் ஜெலஸ்ரின் ஜீவா**

(மாபிள் பதிப்பாளர்)

*விண்ணுலக வாழ்வுதனை உம் விழிகள் நோக்கிடவே*
*எம்விழி மறைந்து போனீரே!*
*பல விழிகள் பாரினிலே ஈரம் சிந்தினவே*
*உம் இருவிழி மூடிய சேதி கேட்டு!*
*நிலையற்ற இவ்வுலக வாழ்வுதனில்*
*நிலையாக உம் அன்பை விட்டுச் சென்றீரே*
*நிழலாக எம் அன்பு நீங்காது என்றும் உம்மை விட்டு*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 14.04.2012 இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு புனித அடைக்கல மாதா தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக மன்றாடவும் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

432/8, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

உம்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர்கள்
மற்றும் நண்பர்கள்

(8171)


கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

YAALH ENGLISH ACADEMY
(077 3212 711)
வழங்கும் இன்றைய தேவை

BASIC + INTERMEDIATE + ADVANCED
PRACTICAL ENGLISH COURSES
FOR ADULTS + SCHOOL STUDENTS

- ❖ உத்தியோகத்தர்க்கு/ உயர் கல்வி மாணவர்க்கு/ ஏனையோர்க்கு.
- ❖ புதிய வகுப்புகள் : 21.4.2012 / 23.4.2012 ஆரம்பம்.
- ❖ இலவசம் : முதலிரு வகுப்புகள் : எமது கல்விமுறையை அவதானிக்க
- ❖ மாதக் கட்டணம் : 500ரூபாய். ❖ தேவையாயின் : இலவசக் கல்வி.
- ❖ முழு விபரங்கள் + பெயர் பதிவு : தொலைபேசி மூலம்: 077 3212 711
- ❖ பெற்றோர் விரும்பினால் : பாடசாலை மாணவருக்கு விசேட வகுப்புகள்

True ease in Language Use comes from Practice, not chance As they walk with grace, who've learned to dance!

- ❖ பெற்றோர், கல்வித்துறையினர், ஊடகவியலாளர் - எமது முன் அனுமதியுடன் எமது மாணவரின் கற்கையை அவதானிக்கலாம்.

வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர். (8161)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்
வகுப்புகள்: சனி,ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(நக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம். (8168)





# இன்று ஒரு தகவல்

## வங்கியில் வசதிகள்

ஒரு திருடனிடம் அவனது மனைவி கேட்டாள்; "என்னங்க... குடும்பச் செலவுக்கு பணம் கேட்டேனே... ஒன்றுமே தருவதாகத் தெரியவில்லையே" என்றாள்.

உடனே அவன் "சற்று பொறு! வங்கிகள் மூடியதும் எடுத்துக் கொண்டு வந்து தருகிறேன்" என்றான்.

இது எப்படி இருக்கிறது. எல்லோரும் வங்கி திறந்தவுடன் பணத்தை மீளப் பெறுவார்கள். இவன் வங்கி மூடட்டும்... பணம் எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்கிறார்.

வங்கி திறக்கவில்லையென்றால், பணம் மீளப்பெறும் வசதி இப்போது பல இடங்களில் வந்துள்ளது.

அமெரிக்காவிலேயும் ஐரோப்பாவிலும் வங்கியிலே கணக்கு வைத்திருக்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய பிளாஸ்டிக் கார்ட் கொடுத்து விடுவார்கள். அதற்குரிய ஒரு இரகசிய நம்பரையும் எங்களிடம் வழங்கி விடுவார்கள். நாங்கள் அதை மனப்பாடம் செய்து மனதிலே ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது பணம் மீளப்பெற வேண்டுமா? வங்கியினுள் நுழைந்து டோக்கன் வாங்கி வரிசையிலே நிற்க வேண்டிய அவசியம் இல்லை.

வங்கி வாசலிலோ அல்லது தெருவில் காணப்படும் ஏதாவது ஒரு பணம் வழங்கும் கருவியின் முன்னால் போய் நிற்க வேண்டியதுதான். சுவரிலே அதைப் பொருத்தி வைத்திருப்பார்கள்.

எங்களிடம் உள்ள கார்ட்டை அந்தக் கருவியிலே சொருகி நாங்கள் மனப்பாடம் செய்த இரகசிய எண்ணை அழுத்த வேண்டும்.

உடனே அந்தக் கருவியின் திரையிலே பல கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும். உங்களுக்கு பணம் வேண்டுமா? உங்கள் கணக்கிலே இருக்கும் மீதித் தொகையை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பணம் வேண்டுமென்றால், எவ்வளவு வேண்டும்? 10,20,30,40...90,100...200...?

இதை எடுத்ததுக்கான சிட்டை வேண்டுமா? அல்லது பணம் மட்டும் வேண்டுமா? இப்படி பல வகையான கேள்விகள் உண்டு.

பணம் மட்டும் வேண்டுமென்றால், நேரடியாக அதற்குரிய பட்டனை அழுத்தினால் ஒரு நிமிடத்தில் கேட்ட தொகை வந்து விடும். நமது கார்டும் திரும்பி வந்துவிடும்.

பணம் வழங்கும் இந்த கருவிக்குப் பெயர் **Cash Dispenser**

இதில் 365 நாட்களும் எந்த நேரத்திலும் பணம் மீளப் பெறலாம்.

நாட்டின் எப்பாகத்திலும் எந்த பிரதேசத்திலும் இக் கருவியின் துணைகொண்டு பணம் எடுக்கலாம்.

அடுத்த நிமிடமே கணனி இணைப்பு கணக்கை கூட்டி கழித்து சரி பார்த்து விடும்.

இப்போது லண்டனில் "ஹீத்ரோ" விமான நிலையத்திலே புதிதாக ஒரு கருவியை வைத்துள்ளார்கள். அதிலே நமது கார்டை இணைத்து உலகின் எந்த நாட்டு பணம் தேவையோ பெற முடியும்.

இந்தக் கருவியிலே நாம் ஏதாவது தவறு செய்து அல்லது மோசடி செய்தால், அது நமது கார்ட்டை விழுங்கி விடும். பணமும் கிடையாது..., கார்டும் வெளி வராது.

விஞ்ஞானம் வளரும்போது அதனோடு சேர்த்து நாகரிகமும் பண்பாடும் வேகமாக வளரவேண்டும். அப்போதுதான் அதன் முழுப் பலனையும் நாம் அனுபவிக்க முடியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# துருக்கியில் தூதரகம் அமைக்க இலங்கை அரசாங்கம் திட்டம்

பல நாடுகளுடன் தூதரக உறவுகளை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் ஓர் கட்டமாக துருக்கியின் அங்காரா நகரில் விரைவில் இலங்கைத் தூதரகமொன்று நிறுவப்படவுள்ளது. இந்த மாத இறுதிக்குள் இந்தத் தூதரகம் அங்குராா்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக ஈராக், லிபியா ஆகியவற்றில் மூடப்பட்டுள்ள தூதரகங்கள் மீளத் திறக்கபடவுள்ளன.

இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு புதிய தூதுரகங்களை அமைக்க உத்தேசித்துள்ளது. (அ-2)

# 24 மணி நேரத்தில் 228 பேர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் 228 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 100 நோயாளிகள் தொடர்ந்தும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

60 பேர் வீதி விபத்துக்கள் காரணமாகவும் வீட்டில் இடம்பெற்ற திடீர் விபத்துக்கள் காரணமாக 49 பேரும் காயமடைந்துள்ளனர்.

எனினும் தீ விபத்து தொடர்பில் காயமடைந்த நிலையில் எவரும் குறித்த காலப்பகுதிக்குள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை என வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவின் நிர்வாகி தெரிவித்தார்.

வழமையாக பண்டிகை காலங்களில் இடம்பெறும் விபத்துக்களை விடவும் இம்முறை விபத்துக்கள் குறைந்த அளவிலேயே இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆயிரத்து 200 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய நட்சத்திரங்கள் கண்டுபிடிப்பு

ஒக்லகோமா பல்கலைக்கழக வானியல் ஆராய்ச்சி உதவி பேராசிரியர் கிலிக் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது ஆயிரத்து 100 கோடி முதல் ஆயிரத்து 200 கோடி பழைமை வாய்ந்த 2 சிறிய நட்சத்திரங்களை கண்டுபிடித்தனர்.வெள்ளை நிறத்தினால் ஆன அவை பூமியில் இருந்து 100 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளன. இவற்றை மனிதர்கள் பார்க்க முடியும். இவற்றில் ஒன்று எரியும் அடுப்பு போன்று தகதகவென வெப்பமாகவும் மற்றொன்று சிறிது குளிர்ச்சியாகவும் உள்ளன.

கிலிக் மற்றும் அவரது குழுவினர் நாசாவின் சக்தி வாய்ந்த ஸ்பிட்சர் விண்வெளி டெலஸ்கோப் மூலம் இவற்றை கண்டுபிடித்து 3 ஆண்டுகள் ஆய்வு மேற்கொண்டனர். (அ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 25-30 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 25 |
| கரட் | 40 | 60 | 45 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 60 | 65-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | -- |
| பயற்றங்காய் | 50 | 80 | 70 |
| லீக்ஸ் | 130 | 70 | 50 |
| பீற்றூட் | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 50 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 300-350 | 400 | 300 |
| போஞ்சி | 40-50 | 70 | 50 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 |

# இராசி பலன்

*14.04.2012*
*(சித்திரை 02, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*அட்டமி முற்பகல் 9.21 மணிவரை*
*உத்தராடம் பிற்பகல் 3.22 மணிவரை*
*இராகுகாலம் 9.04-10.34 மணிவரை*
*சுபநேரம் 3.04-4.34 மணிவரை*

**மேடம்** இனிமையான நாள், தொழிலில் பங்குதாரர்கள் இணக்கமாக நடந்து கொள்வர், நினைத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வீடு, இடம் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயங்கள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**இடபம்** பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், எதிர்பாராத வகையில் சில பயணங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றம் காணப்படும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் காண்பீர்கள்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையக்கூடியளவுக்கு திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல்நலனில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான நாள்.

**கன்னி** சுப செய்திகள் வந்து சேரும் நாள், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரும், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றியளிக்கும்.

**துலாம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும், சுவாரஸ்யமான நாள், வருமானம் திருப்தி தரும், உறவினர் உதவிக்கரம் நீட்டுவர்.

**தனுசு** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரியும் நாள்.

**மகரம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக பயணங்கள் ஏற்படலாம், வருமானத்தை அதிகரிப்பதில் நாட்டம் காட்டுவீர்கள், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், உறவினர் நலன் கருதி சில செலவுகள் இடம்பெறலாம்.

**மீனம்** தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையலாம், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

வளவன்

# யாழ். பொது நூலகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

## தேவைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)


யாழ். பொது நூலகக் கட்டத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது மாணவர்கள் வாசிப்பு பகுதியை மேலும் விரிவுபடுத்தி வசதிகளை மேற்கொள்ளல், பயிற்சிகள் மற்றும் இதர கருத்தரங்குகள் உட்பட்ட தேவைகளுக்காக ஒரு பகுதியை ஒதுக்குதல், கணனி அறையை விரிவுபடுத்த ல் மற்றும் புதிதாக மேலும் கணனி இயந்திரங்களை பெற்றுக் கொள்ளுதல் உட்பட பல தேவைகள் குறித்து அமைச்சர் அவதானம் செலுத்தியுள்ளார்.

அத்துடன் மாநாட்டு மண்டபத்திற்கென புதிதாக மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் பொது நூலகக் கட்டத்தின் மொட்டை மாடியாக இருக்கும் பகுதிகளையும் பயன்படுத்தக்கூடியதாக மாற்றியமைத்தல் தொடர்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவதானம் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்படும் குருசுமதவடிப்பாலம்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதி குருசுமதவடியில் அமைந்துள்ள பாலம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் அப்பாலத்தினூடாக பயணிப்போர் விபத்துக்களினை எதிர்நோக்கிவருவதோடு மழை காலங்களில் அப்பகுதி மக்கள் வெள்ளம் வழிந்தோடாமையினால் பல இன்னல்களினையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் குறித்த பாலம் தகரங்களினை வைத்து கற்களை முறையற்ற விதத்திலும் போட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் பாலத்தில் வெடிப்புக்கள், கிடங்குகள் ஏற்பட்டு அபாயகரமாக காணப்படுகின்றது.

மானிப்பாய் வீதி பிரதானவீதியாக காணப்படுவதால் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் இப்பாலத்தினூடாக பயணம் செய்வதோடு இரவில் ஒவ்வொரு நாளும் இப்பாலத்தில் உள்ள பாரிய கிடங்கில் வாகனங்கள் அகப்பட்டு விபத்துக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்ற குறித்த பாலம் தொடர்பாக உரியவர்களுக்கு பலமுறை அறிவிக்கப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அண்மையில் இவ்வீதியால் பயணம் செய்த குருசு மதவடியை சேர்ந்த அருணகிரிராஜா ரஞ்சி (வயது-51) என்ற குடும்பப்பெண்மணியின் கால் இப்பாலத்தில் காணப்படும் கிடங்கில் அகப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# இளைஞர் விளையாட்டுக்கழக இல்ல மெய்வல்லுநர்போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டு கழகம் நடத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கழக மைதானத்தில் கழகத்தலைவர் க. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சேமிப்பு வங்கி ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர் மா. பரமானந்தம், சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திஸ்ஸ காங்கர, பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கி. யோகேந்திரன், கரணவாய் கிராம சேவையாளர் ரி. புவனேந்திரன், சமூக அபிவிருத்தி உத்தியோக்கத்தர் வெ. சிவசுப்பிரமணியம், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் பா. முகுந்தன், கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் இ. அனுராகாந்தன் மற்றும் கௌரவவிருந்தினர்களாக கரணவாய் மணியகாரத் தோட்டம் அ.த.க. பாடசாலை அதிபர் சு. பாஸ்கரன், வைத்தியர். க. உதயகுமார், வள்ளுவர் சனசமூக நிலைய தலைவர் சி. தர்மகுலசிங்கம், அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டு கழக முன்னாள் தலைவர் மா. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-24)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சிவன் புது வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மணற்றரை லேன் சனசமுக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)




# வயோதிபரின் சடலம் மீட்பு

(பருத்தித்துறை)

புலோலி வடமேற்கு காந்தி ஊர்ப்பகுதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன் காணாமல் போயிருந்த வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்தநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருந்து புறப்பட்டு காணாமல் போயிருந்த வேளையே நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச்சேர்ந்த ஏ.கிருஸ்ணமூர்த்தி (வயது 63) என்ற 9 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (அ-3-10-24)

# பேருந்து சேவைகளை சீராக நடத்த கோரிக்கை

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்திலிருந்து கட்டைக்காடு செல்வதற்கான பேருந்து சேவைகள் சீராக நடைபெறுவதில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மருதங்கேணி, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்கு இ.போ.ச பேருந்து சேவை, தனியார் பேருந்து சேவை எவையும் சீராக இடம்பெறாமையால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் தூர இடங்களுக்கு போக்குவரத்து செய்யமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பேருந்து சேவை சீரற்று இருப்பதால் அவசர பயணிகள் புதுக்காடுச் சந்தியில் இருந்து மருதங்கேணிக்குச் செல்வதற்கு முச்சக்கரவண்டியில் 250 ரூபா பணம் கொடுத்து பயணிக்கும் அவலநிலை காணப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் அப்பகுதி மக்களின் சிரமங்களை உணர்ந்து கட்டைக்காடு செல்லும் பேருந்து சேவையை சீராக ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல், செயலர் பொ. கமலநாதன், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் வசந்தமாலா மனோகரன், நிர்வாக உத்தியோகத்தர் து. அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)



யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட 19 வயது பெண்கள் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியினர் சம்பியனாகினர். இவ்வணியினருடன் அதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுனர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தலைவர் என்.இராஜதேவன் அறிவித்துள்ளார்.

மேற்படி பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்து தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# பொருட்களின் விலை மீண்டும் எகிறும்

தமிழ், சிங்கள புத்தாண்டின் பின்னர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை உயர்வடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

பால்மா, எரிபொருள், எரிவாயு, கோதுமை மா, சீனி உள்ளிட்ட பல அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்த்தப்படவுள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கம் காரணமாக இறக்குமதி செலவு உயர்வு மற்றும் வரி அதிகரிப்பு ஆகிய காரணிகளினால் பொருட்களின் விலை உயர்வடையும் என சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# கூடங்குளம் அணுமின் நிலைய கதிர்வீச்சு குறித்து ஆராய்வு

(சென்னை)

இந்தியாவின் கூடங்குளத்தில் அமைக்கப் பட்டுள்ள அணுமின் நிலையத்தினால் இலங் கைக்கு கதிர்வீச்சு அபாயம் நிலவுவதானால் நாட்டின் வடக்குப் பகுதியில் கதிர்வீச்சை அள விடும் பணிகள் தற்போது இடம்பெற்று வரு வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை யிலான கரையோரப் பகுதிகளின் இந்தப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

தென்னிந்தியாவில் நிறுவப்பட்டுள்ள அணு மின் நிலையத்தால் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால் இந்தப் பகுதியே அதிகளவில் பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. மன் னார் நகரில் இருந்து சுமார் 250 கி.மீ. தொலைவில் உள்ள கூடங்குளத்தில் இந்த அணுமின் நிலையம் அமைந்துள்ளது.

கதிர்வீச்சின் அடிப்படை அளவை கண் டறிவதும் அதனை அடிப்படையாக வைத்து உள்ளூர் அதிகாரிகள் மூலம் தொடர்ச்சியாக கதிர்வீச்சு அளவை கண்காணிப்பதற்குமே இந்த அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

தொடர்ச்சியாக இந்தக் கண்காணிப்பு மேற் கொள்ளப்படும். இதன்மூலம் கதிர்வீச்சின் அளவில் ஏதேனும் மாற்றம் தென்பட்டால் இல குவாக அடையாளம் காண முடியும். (அ-2)

# வழங்கப்படும் அபிவிருத்திகளை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்

## அமைச்சர் றிசாட் ஆலோசனை

(கொழும்பு)

எமது சொத்துக்களையும் செல்வத்தை யும் இழந்ததுதான் மூன்று தசாப்தகால யுத்தத்தினால் நாம் பெற்றுக் கொண்ட பலன் யுத்தம் முடிவடைந்து விட்ட இன்றைய நிலை யில் இழந்த கல்வி எனும் செல்வத்தை மீண் டும் பெற்றுக் கொள்ள முனைப்புடன் செயற் பட வேண்டும் என்று அமைச்சர் றிசாட் பதியு தின் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அரசினர் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற புதிய வகுப்பறைக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த் துகையில்,

இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டம் இருந்த நிலையி னையும் தற்போதைய நிலையினையும் நீங் கள் மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு கிரா மத்தின் அபிவிருத்தியில் தான் அனைத்து விடயங்களும் தங்கியுள்ளன. எவ்வித அடிப் படை வசதிகளும் இன்றி எமது ஊருக்கு வரு கின்ற அபிவிருத்திகளை புறந்தள்ளி விட்டு எமது மாணவர்களது எதிர்பார்ப்புக்களை எவ்வாறு நிறைவேற்ற முடியும்.

புளியங்குளம் முதல் நெடுங்கேணி வரை க்கும் நெடுங்கேணி முதல் ஒட்டுசுட்டான் வரை க்கும் ஒட்டுசுட்டான் முதல் முல்லைத்தீவு வரைக்குமான பாதைகள் தற்போது நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகி ன்றன.

இவ்வருட முடிவுக்குள் இப்பணிகள் முழுமையடையும் அதற்கு பின்னர் முல் லைத்தீவிலிருந்து வெலி ஓயா வரைக்கும் செல்லும் பாதை புனரமைக்கப்படும். இத னால் குமுழமுனை, கொக்கிளாய் உட்பட அனைத்து கிராமங்களும் சிறந்த பாதை வசதிகளை பெறும் அதனால் போக்குவரத்து சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

இவ்வாறு வரும் அபிவிருத்திகள் எமக்கு தேவையில்லையென தொடர்ந்தும் நாம் விதண்டாவாதம் புரிவோம் என்றால் அது எதிர்கால சமூகத்துக்கு செய்யும் துரோகமும். அநியயாமுமாகும்.

கடந்த 30 வருட எமது கல்வித் துறையினை நாம் பின்னோக்கி பார்த்தால் பெரும் கவலை யளிக்கின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவ ட்டம் இயற்கை அழிவினையும் யுத்த அழி வினையும் கண்ட ஒரு மாவட்டமாகும்.

எமது மாணவர்கள் பெற வேண்டிய பல் வேறு கல்விசார் அனுகூலங்கள் எமக்கு கிடைக்காமல் போயின. அதனை நாம் இன்றிலிருந்து பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும். ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற் றோர்களும் இதில் பங்குதாரர்களாக மாற வேண்டும் என்றார். (அ-2)

# செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான க.பொ.த(சா/த) பரீட் சைக்கான முன்னோடி வினாத்தாள் தயா ரித்தல் செயலமர்வு நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் நடை பெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற் றன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வுக்கு வரும்போது 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளின் க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் பகுப்பாய்வினையும் கொண் டுவருமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-15)

# விலைப்பட்டியல் இன்றி வவுனியா தெற்கு வலய சிற்றுண்டிச்சாலை


வவுனியா தெற்கு வலயக் கல்வி அலு வலகத்தில் இயங்கி வரும் சிற்றுண்டிச்சா லையில் நீண்ட காலமாக விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமையால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரி வித்துள்ளனர்.

இச்சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரப்பட்ட போது வழங்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு உணவுப் பொருட்கள் விற்கப்படுகின்றன.

அங்கு கடமையாற்றும் சில உயரதிகா ரிகளுக்கு மட்டும் கேள்வி கோரலின் போது வழங்கப்பட்ட விலைக்கே உணவுப் பொரு ட்கள் வழங்கப்படுவதனால் ஏனையவர்க ளுக்கு அதிக விலைக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது குறித்து உயரதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை எனவும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விலைக்கட்டுப்பாடு அதி காரிகள் உரிய நடவடிக்கை எடுத்து கேள்வி கோரலின் போது வழங்கப்பட்ட விலைக்கு உணவுப் பொருட்களைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் கேட்டுள்ளனர். (அ-2)

# அணுக்கதிர்வீச்சு அபாயம்? மறுக்கிறார் தலைவர் பானர்ஜி



கூடங்குளம் அணு மின் நிலையத்தால் கதிர் வீச்சு அபாயம் உள்ளதாக இலங்கை தெரிவித்த குற்றச்சாட்டு தவறானது. உலகில் உள்ள அணுமின் நிலையங்களில் கூடங்குளம் அணு மின் நிலையம் தான் மிகவும் பாதுபாப்பானது என இந்திய அணு சக்தி திட்ட தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி கூறியுள்ளார்.

இந்தியாவின் தென் பகுதியில் உள்ள அணுமின் நிலை யங்களால் இலங்கைக்கு கதிர் வீச்சு அபாயம் ஏற்படும் சூழல் உள்ளது. இது குறித்து சர்வதேச அணுசக்தி கழகத்திடம் புகார் அளிப்போம் என இலங்கை எரிசக்தி துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க சமீபத்தில் புகார் தெரிவித்து இருந்தார். இந்திய அணுசக்தி திட்ட தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி இதை மறுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் கூறியதாவது, கூடங்குளம் அணு மின் நிலையம் குறித்து இலங்கை தெரிவித்துள்ள புகார் தவறானது. உலகில் உள்ள அணு மின் நிலை யங்களிலேயே மிகவும் பாதுகாப்பானது கூடங்குளம் அணுமின் நிலையம் தான். இங்கு பாது பாப்புக்கு எந்த பிரச்சினையும் இல்லை. முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் இங்கு செயல் படுத்தப்பட்டுள்ளன. விபத்து போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டால் எல்லை தாண்டிய பிரச்சி னைகளுக்கு எப்படி தீர்வு காண்பது என்ற விடயத்தில் சர்வதேச அணுசக்தி கழகத்துடன் ஏற்க னவே இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இந்திய அணுசக்தி கொள்கை தொடர்பான சட்டத் திலும் இதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீகுமார் பானர்ஜி கூறினார். (அ-2)


யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்




பழைய மாணவர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்

மாபெரும் கலை விழா

இடம் : கல்லூரி மைதானம்
காலம் : 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 04.30 மணி

- மங்கல இசை
- நாட்டியாஞ்சலி
- நாடகம்
- நாட்டுக்கூத்து
- இன்னிசை கானங்கள்

பிரவேச அன்பளிப்பு 1000/=, 500/=, 250/=,
மாணவர்கள் 50/=

அனைவரும் வருக; கலையின்பம் பெறுக; ஆதரவு தருக.
- பழைய மாணவர் சங்கம் -
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

# விளையாட்டுத்துறையில் யாழ்.மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ளும்

## நம்பிக்கை உள்ளது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் மேலும் ஆற்றல் கொண்டதாக இத்துறையை மேம்படுத்துவதற்கும் நாம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் விளையாட்டுத்துறையில் யாழ்.மாவட்டம் இந்நாட்டில் முதலாவது இடத்தைப் பிடிப்பதற்காகவும் உழைத்து வருகிறோம். இந்த வெற்றியை நாம் விரைவில் நிரூபிக்க இயலும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகளின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கு நாம் பல செயற்றிட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்தி வரும் நிலையில் ரமணன் போன்றவர்களது பங்களிப்புக்கள் பாராட்டக்கூடியவை.

யாழ்.மத்திய கல்லூரியில் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்கின்றவர்களது கோரிக்கைக்கு அமைவாக பைபர் போர்ட் வழங்க உடனடி நடவடிக்கை எடுத்துள்ளேன். அதே போன்று இரவு நேர விளையாட்டுக்களின் போது வெளிச்சம் போதாமையாக இருப்பதால் அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலதிகப் பயிற்சிகளுக்காக அருகிலுள்ள இடமொன்றை ஏற்பாடு செய்யவுள்ளேன்.

எமது சமூகம் முன்நோக்கிச் செல்கின்ற சமூகமாக அமைய அனைத்து வழிகளிலும் நாம் உழைத்து வருகின்றோம்.

இன்றைய நிகழ்வில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ்.ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்தாடிய லெமிரியன்ஸ் கழகம் வெற்றி பெற்றதுடன் ஆண்கள் பிரிவில் ஜொலிஸ்ரார் கழகத்தை எதிர்த்தாடிய சென்றல் எலைட்ஸ் கழகம் வெற்றியீட்டியது. (அ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மீளக்குடியமர்வோர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தெல்லிப்பழை வலி. வடக்கு பிரதேச செயலர் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே, சகல பொதுமக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின்படி இலங்கை செல்லும் குழு நியமிக்கப்பட்டது

## இந்திய அமைச்சர் பவன்குமார் தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் பிரதிநிதித்துவ அடிப்படையிலேயே இலங்கை செல்லும் குழு நியமிக்கப்பட்டதாக மத்திய பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பவன் குமார் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் புனர்நிர்மாணப் பணிகளைப் பார்வையிட எதிர்வரும் 16 ஆம் திகதி இந்திய பாராளுமன்ற எம்.பிக்கள் குழு இலங்கைக்கு வருகிறது.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உட்பட சில கட்சிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் உறுப்பினர் பலத்தின் அடிப்படையில்தான் இலங்கைக்குச் செல்லும் பாராளுமன்றக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எல்லோரையும் குழுவில் சேர்ப்பது இயலாத காரியம். அந்த வகையில் விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் பட்டியலில் இடம்பெறாமல் இருந்திருக்கலாம். இலங்கை செல்லும் எம்.பிக்கள் குழுவின் பட்டியல் இறுதிப்படுத்தப்பட்டு விட்டதா என்பது எனக்குத் தெரியாது என்றார். (அ-2)

# ஜனநாயக நாடாக இலங்கையை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்

## அமெரிக்காவின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

(கொழும்பு)

உலகம் முழுவதிலும்வாழும் இலங்கையர்களுக்கு தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறி அமெரிக்கா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சார்பில் அந்நாட்டு இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் உத்தியோகபூர்வ இந்த வாழ்த்து செய்தியை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

உலகம் முழுவதிலும் வாழும் இலங்கையர்களுக்கு தமிழ்- சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாக கூறி அமெரிக்கா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை வெளிப்படுத்தியுள்ளது.

புத்தாண்டு பண்டிகை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள ஓர் வாய்ப்பாக அமைந்துள்ளது என ஹிலாரி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வாழும் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் ஒன்றிணைந்து சுபீட்சமானதும் ஜனநாயகமானதுமான இலங்கையை கட்டியெழுப்ப முயற்சி எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 150 ஆண்டுகளாக இலங்கையுடன் பேணி வந்த உறவுகளை போன்றே தொடர்ந்தும் சிறந்த உறவுகளை பேண அமெரிக்கா விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவளிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க கூடியதும் நெகிழ்வுத்தன்மையுடன் கூடியதுமான இலங்கையை உருவாக்க இந்நாட்டு, வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை 19 ஆம் திகதி

(தூத்துக்குடி)

அடிப்படை பணிகளே இன்னும் ஆரம்பிக்கப்படாததால் தடைப்பட்டுள்ள தூத்துக்குடி-கொழும்பு பயணிகள் கப்பல் சேவை அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் மீண்டும் இயக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தடைப்பட்ட தூத்துக்குடி- கொழும்பு பயணிகள் கப்பல் சேவை இம்மாதம் 19 ஆம் திகதி முதல் மீண்டும் இயக்கப்படும். இம்முறை 450 பேர் பயணம் செய்யக்கூடிய சிறிய கப்பல் இப்போக்குவரத்திற்கு தனியார் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுமென தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தலைவர் சுப்பையா கடந்த முதலாம் திகதி அறிவித்தார்.

இக்கப்பல் பயணத்திற்காக டிக்கெட் புக்கிங் ஏஜென்ட் நேற்று முன்தினம் மாலை வரை நியமிக்கப்படவில்லை. அதன்பின்னரே கட்டண விபரம் அறிவிக்கப்படும்.

மேலும் கப்பலில் செல்ல விரும்பும் பயணி பாஸ்போட் வைத்திருந்தால் போதும். தூத்துக்குடியிலிருந்து கப்பலில் அவர் கொழும்பு சென்றவுடன் அவருக்கு அங்கு கப்பலிலேயே விசா தரப்பட்டது. கடந்த ஜனவரி முதல் அம்முறை மாற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது இக்கப்பலில் இங்கிருந்து பயணிக்க விரும்புபவர் சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரகத்தில் சென்றுதான் விசா வாங்கி வர வேண்டும் என்ற விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாக சுற்றுலா டிராவல்ஸ் ஏஜென்ட் ஒருவர் தெரிவித்தார்.

டிக்கெட், புக்கிங் ஏஜென்ட் நியமனம் உள்ளிட்ட அடிப்படைப்பணிகள் எதுவும் நடக்காத சூழ்நிலையில் விசா வாங்குவதிலும் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதால் அறிவிக்கப்பட்ட படி இம்மாதம் 19 ஆம் திகதி இக்கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதுமேலும் சில வாரங்கள் தாமதமாகும் எனத் தெரிகிறது. (அ-2)

# கல்வித்துறைக்கு மிகவும் சொற்பளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறைக்காக மிகவும் சொற்பளவிலான நிதியே ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு திருப்தி அடையக்கூடிய வகையில் அமையவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையை மேம்படுத்த உரியளவில் ஒதுக்கீடு செய்யாவிட்டால் அது அபிவிருத்தியை பாதிக்கும் எனீ அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூட கல்வித்துறைக்காக மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 1.8 வீதமே கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# புதுவருட வியாபாரத்தில் மூவின வியாபாரிகளும் ஈடுபாடு

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசங்களில் இம்முறை புதுவருட வியாபார நடவடிக்கைகளில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்துள்ள மூவின வியாபாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

இருந்த போதும் புதுவருட பொருட்களை வேண்டுவதில் மக்கள் அதிகளவில் நாட்டம் கொள்ளவில்லை.

இதேவேளை, கிளிநொச்சி நகரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் புத்தாண்டு சந்தை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் கடந்த 9 ஆம் திகதி இச்சந்தை திறந்து வைக்கப்பட்டது. இப்புத்தாண்டு சந்தையில் பொது மக்கள் தமக்குரிய புத்தாண்டு பொருட்களை வாங்கி வருடத்தை சிறப்பாக கொண்டாடுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

70

## ஞாபக சக்தி



ஓர் அமாவாசையன்று ரமேஷ் காமேஷின் வீட்டிற்கு வந்திருந்தான். அன்று ஒரு யோகி காமேஷின் வீட்டிற்கு வந்தார். அந்த யோகியை வணங்கிய ரமேஷ் இரு செப்புக் காசுகளை அவரிடம் தந்துவிட்டு ஒன்று என் சார்பிலும் மற்றொன்று என் நண்பன் காமேஷ் சார்பிலுமாக உங்களுக்கு இதை காணிக்கையாக அளிக்கிறேன்

### அம்புலி மாமா கதைகள்

என்றான்.

அவனை ஆசீர்வதித்த யோகி, உங்கள் இருவருடைய நட்பும் பாராட்டத்தக்கது. ஆனால், உன் நண்பன் சார்பில் நீ எனக்குக் கொடுத்த காசைத் திரும்ப அவனிடமிருந்து பெற்றுக்கொள்ளாதே! இனி எனக்கு ஒவ்வொரு அமாவாசையும் நீ உன் நண்பனுக்கு ஒரு செப்புக்காசு கொடு! இதனால் உன் நண்பனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். அதேபால் உன் நண்பனும் உனக்கு ஒவ்வொரு பெளர்ணமியன்றும் ஒரு செப்புக்காசு தர வேண்டும். அதனால் உனக்கும் இலாபம் உண்டாகும். ஆனால், ஒருவருக்கொருவர் இதை ஞாபகப்



படுத்தாமல் தாங்களாகவே நினைவில் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும் என்று கூறி விட்டுச் சென்றார்.

அடுத்த நாளே பல நாட்களாக வாங்கிய கடனைத் திருப்பித்தராமல் காலங்கழித்த பிரபாகரன் என்ற ஒருவன் திடீரென தனது பழைய பாக்கியை எல்லோருக்கும் திருப்பிக் கொடுத்தான்.

காமேஷுக்கும் அவனது பழைய கடன் திரும்பக் கிடைத்தது. அதைக் கேள்விப்பட்ட ரமேஷ் யோகியின் ஆசீர்வாதம் பலித்தது என்று எண்ணிக் கொண்டான். ஆனால், பெளர்ணமியன்று காமேஷ் தன் நண்பனுக்கு செப்புக் காசு தர மறந்து போனான்.


யோகியின் சொல்லை மறக்காத ரமேஷ் மட்டும் அமாவாசையன்று காமேஷிற்கு செப்புக் காசை அளித்தான். அதைப் பெற்றுக் கொண்ட காமேஷ், உனக்கு அந்த யோகி சொன்னது நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது என்று கேட்டான்.

அதற்கு ரமேஷ் உனக்கு அதனால் பயன் உண்டாகும் என்று யோகி கூறியிருக்கும் போது நான் தர மறப்பேனா? என்றான். சரிதான் நீ கொடுக்கும் இந்த செப்புக்காசினால் தான் என் கடன் வசூலாயிற்று என்று கூற விரும்புகிறாயா? எனக்கு நல்ல நேரம் என் கடன் திரும்பக் கிடைத்தது என்றான்.

அதைத் தொடர்ந்து எனக்கு உன்னைப் போல ஞாபக சக்தி கிடையாது. பெளர்ணமியன்று நான் உனக்கு காசு தானம் செய்ய மறந்து விட்டேன் என்றான். அன்றிரவு ஒரு பக்காத்திருடன் ஏதோ ஒரு வீட்டில் திருட முயற்சிக்கையில் பிடிபட்டான். பல நாள் திருடனான அவன் அதுவரை தான் திருடிய பொருட் களை ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான். அவற்றை மீட்ட காவலர்கள் திருட்டுப் பொருட்களை சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தனர். காமேஷின் திருட்டுப் போன சில நகைகளும் திரும்பக் கிடைத்தன.

ரமேஷ் தனக்கு தானம் அளித்த செப்புக்காசின் மகிமையினால்தான் களவு போன பொருள் தனக்குத் திரும்பக் கிடைத்தது என்று காமேஷுக்குத் தோன்றியது. தானும் அதுபோல் ரமேஷுக்குப் பெளர்ணமியன்று தானம் செய்தால் அவன் நிச்சயம் இலாபம் அடைவான் என்று தோன்றியது. அதனால் காமேஷ் வேண்டுமென்றே பெளர்ணமியன்று ரமேஷுக்கு தானம் செய்யாமல் இருந்து விட்டான்.

இவ்வாறு ரமேஷ் ஒழுங்காக தானம் கொடுக்க காமேஷ் ஞாபக மறதியினால் மறந்து விட்டதாக நடித்து வந்தான். ஆனால், ஒரு பெளர்ணமியன்று அயலூர் சென்றிருந்த ரமேஷினால் தன் நண்பனுக்கு செப்புக் காசு தானம் தர இயலவில்லை.



அன்று தன் தோட்டத்தைத் தோண்டிய போது ரமேஷுக்கு மண்ணில் புதைந்திருந்த ஒரு பெட்டி கிடைத்தது.

பெட்டி நிறைய தங்க நகைகள் இருக்கும் என்று மனப்பால் குடித்துக் கொண்டே அதைத் திறந்த காமேஷுக்கு பயங்கர ஏமாற்றம் ஏற்பட்டது. பெட்டி நிறைய கூழாங்கற்கள் தான் இருந்தன. ஆகா! அமாவாசையன்று ரமேஷ் வழக்கப்படி தனக்கு தானம் செய்து இருந்தால் கூழாங்கற்களுக்கு பதில் தங்க நகைகள் கிடைத்திருக்குமே என்று காமேஷ் புலம்பினான்.

ரமேஷ் தன் வீட்டில் புதிதாக ஒரு கிணறு தோண்டு வதைப் பற்றிய செய்தி காமேஷை எட்டியது. பெளர்ணமியன்று தான் அவனுக்கு இந்த முறையாவது செப்புக் காசு தானம் செய்யலாமா என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அதனால் அவனுக்கு கிணறு தோண்டப்போய் புதையல் கிடைத்து விடுமோ என்ற பயமும் தோன்றியது.


கிணறு தோண்டி முடிந்து விட்டது என்று அறிந்த பின்னர் சாவகாசமாக ரமேஷின் வீட்டிற்குச் சென்ற காமேஷ் நண்பா! இந்தப் பெளர்ணமி தினத்தன்றும் உனக்கு தானம் செய்ய மறந்து விட்டேன். இன்றுதான் ஞாபகம் வந்தது. இந்தா செப்புக் காசைப் பெற்றுக்கொள் என்றான்.

கூடியிருந்த அனைவரும் என்ன விடயம் என்று புரியாமல் விழிக்க ரமேஷ் யோகியின் வரத்தைப் பற்றி விளக்கினான். பின்னர் காமேஷை நோக்கி நண்பா! சென்றமுறை அமாவாசையன்று நான் ஊரில் இல்லை. அதனால் உனக்கு தானம் தர முடியவில்லை என்று கூறிவிட்டடு சிறிது நேரங்கழித்து நான் உனக்கு ஒவ்வொரு அமாவாசையன்றும் தானம் அளித்து வந்தேன்.

அதனால் உனக்கு சில இலாபங்கள் ஏற்பட்டன. ஆனால், பதிலுக்கு எனக்கு தானம் செய்ய வேண்டிய உனக்கோ அசாத்திய ஞாபக மறதி ஏற்பட்டு விட்டது. முதன் முறையாக இப்போது தான் உனக்கு தானம் தர வேண்டும் என்ற ஞாபகமே ஏற்பட்டுள்ளது.

மனிதனுக்கு ஞாபக சக்தி மிக மிக முக்கியம். இதுவரை நீ பெற்ற இலாபங்களை விட இதுவே நீ பெற்ற மிகப் பெரிய நன்மை. அதனால்தான் நான் இனி தானம் செய்யப் போவதில்லை. என்றான். சுற்றியிருந்தவர்கள் சிரிக்க மறுபடியும் காமேஷின் மூக்கு உடைந்தது.

# சித்திரைப்புத்தாண்டு வேளாண் விருத்திக்கு வழி சமைக்கட்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

18-XI

பிறந்திருக்கும் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு அனைவருக்கும் வளமான வாழ்க்கையை தர வலம்புரியுடனிணைந்து எழுதும் இக்கைகளும் வாழ்த்துகின்றன.

வழமையாக வசந்தம் வீசும் இம் மாதத்தில் சுனாமி அனர்த்தம் என்ற சலசலப்புடன் புத்தாண்டு பிறந்திருப்பதுவும் ஆங்காங்கே பெயருக்கு மழை பெய்தாலும் வரண்ட கால நிலை தொடர்ந்தும் இருப்பதும் சுட்டெரிக்கும் வெயிலில் மக்கள் துவண்டு போயிருப்பதுவும் கால நிலையிலேற்பட்ட மாற்றத்தின் அறிகுறிகளேயன்றி வேறில்லை.

எம்மையும் மீறி காலநிலையில் ஏற்பட்டிருக்கும் இவ்வகையான மாற்றங்கள் வரண்ட வலய பிரதேசத்தினுள் வாழும் எமக்கு புதிதில்லையெனினும் இம்முறை எல்லோரையும் வாட்டி எடுத்திருக்கின்றது.

இதனை மையப்படுத்தியே கடந்த வருட கருப்பொருளாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கொண்டிந்ததனையும் அதன் இறுதி நிகழ்வான 19 ஆவது வருடாந்த மாநாட்டின் ஆரம்ப நாளான இம்மாதம் 4 ஆம் திகதி பேராசிரியர் க. பால சுப்பிரமணியம் தங்கவிருது விரிவுரையாக காலநிலைமாற்றம், நீரின் தன்மை மற்றும் சுகாதாரம் எனும் கருப்பொருளில் கண்டியிலுள்ள அடிப்படை கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் சி.பி. திசநாயக்கா அவர்கள் நிகழ்த்தியுள்ளார்.

புவி இரசாயனவியலில் புலமை வாய்ந்த இவரது விரிவுரையில் எமக்கு தேவையான சமகாலத்தில் பூமியில் நிகழும் மாற்றங்கள், தன்மைகள், தாக்கங்கள் பற்றி எடுத்துக்கூறியமை பெறுமதி வாய்ந்ததாக இருந்தது.

குறிப்பாக நீரில் ஏற்படும் மாற்றங்கள், மாசுபடுதல் என்பனவற்றை குறிப்பிட்டது பலரையும் வியக்க வைத்தது.

அநுராதபுரம், மதவாச்சி பகுதிகளில் ஆசனிக்கு, கட்மியம் போன்ற மூலகங்களின் செறிவு குடி நீரில் கூடும் போது ஏற்படும் விளைவுகளையும் குறிப்பாக சிறுநீரக நோய்கள் பற்றியும் விளக்கியமை மிகவும் பயனுள்ளதாயுள்ளது.

இன்னும் காலநிலை மாற்றத்தினால் எமது சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பாக சாதக, பாதகமான நிலைமைகளை சுட்டிக் காட்டி அவற்றிற்கு தகுந்த விளக்கங்களை, தமது அறிவுப்புலமையை உள்ளீர்த்து எடுத்தியம்பியமை அவரது புலமையை ஆய்வின் ஆழத்தை எடுத்துக்கூறியதுடன் மேலும் இவை பற்றி அறியவும் சிந்திக்கவும் வைத்திருக்கின்றது.

இன்னும் மனிதனொருவனில் உள்ள மூலகங்களின் எடையையும் பாறை ஒன்றிலுள்ள மூலகங்களின் எடையையும் ஒப்பிட்டு இரண்டிற்கும் அதிக வேறுபாடு இல்லையென ஆய்வுரீதியாக மெய்ப்பித்திருப்பதை மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன் என்பதற்கு இன்னொரு அர்த்தத்தையும் கொடுத்திருக்கின்றார். மொத்தத்தில் வேதியியல் அடிப்படையில் மனிதனும் மலையும் ஒன்றே. இனியாவது மனிதனை மலையென, கல்லென திட்டாதீர்கள். உணர்வு ஒன்றைத்தவிர மனிதன் கல்லுத்தான்.

இதை ஆதாரமாக வைத்துத்தான் எமது சமய விக்கிரகங்களை மலையிலெடுத்த கல்லில் பொழிந்தார்கள். இறைவனார் மூலமூர்த்தியாக கல்லில் செய்த கல்லானார்.

அவற்றை நாம் வழிபடும் போது மலையை தானே வழிபடுகின்றோம். அங்கே உருவ வழிபாடு உருப்பெறுகின்றது. கல்லைக் கண்டவர் நாயை கண்டிலர். நாயைக் கண்டவர் கல்லை கண்டிலர். சித்திரை புத்தாண்டு இன்னுமொரு சேதியையும் கொண்டு வந்திருக்கின்றது.

இரு தாய் மொழிகளுக்கு இடையிலான உறவுப் பாலம் தான் அது. தமிழ்– சிங்கள மொழிகளை இணைத்து இத்தீவில் சுதந்திரமான தேசத்தை கட்டியெழுப்ப எத்தனை எத்தனை சித்திரை மாதங்கள் வந்து போயின. புத்தாண்டுகள் பிறந்து போயின.

ஆனால் உணர்வு ரீதியாக சிந்திக்கும் ஆண்டாக இம்முறை சித்திரையாள் பிறந்திருக்கின்றாள். இந்நாட்டு மக்களுக்கு என்ன கொண்டு வந்தாள். சுகமான காற்று, சுத்தமான உணவு, சுகந்தமான நீர், சுதந்திர உணர்வு, ஒற்றுமை, நம்பிக்கை, உரிமை இவை அனைத்தையும் அனைவருக்கும் சேர்த்தே கொண்டு வந்திருக்கிறாள்.

அமைதி, ஆனந்தம், ஆச்சரியம் இவற்றை சொல்லளவில் கேட்காது வாழ்ந்தனுபவிக்கும் காலம் கனிந்து வரும். இனங்களுக்கிடையில் நல்லுறவு, நம்பிக்கை, இவற்றுடன் அனைவரும் சமம் எனும் காலம் நல்ல சேதியுடன் ஓடிவரும் என இன்னும் நாம் நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

சவால்களுக்கு முகங்கொடுத்து விவசாய செய்கையில் இனியொரு பசுமை புரட்சி செய்தல் இங்கொரு தேவையாகும். வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பசுமையின் உளங்கொண்டு பசுமையின் நிறங்கொண்டு உழுதுண்டு வாழ்வோரை வாழ்த்துவோம். அவர் உயர்வுக்காக எமது ஆய்வுகளை முடுக்கிவிடுவோம்.

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்? இருப்பதை அறிந்து அதனை மூலதனமாக்கி பசுமையிலும் தொழில் நுட்பத்திலும் புரட்சி செய்து தன்னிறைவு சமூகத்தை உருவாக்குவோம். வாருங்கள் இது எம்மால் முடியும்.

வேளாண் அபிவிருத்தியில் விவசாய பீடம் பலவற்றை செய்ய வேண்டியிருக்கின்றது. இதற்கொரு களம் அமைத்தல் நன்று.

இன்னும் இது பற்றி சிந்திப்போம். இணைவோம் நன்றே செய்வோம்.

# நாட்டின் பல்வேறு வாகன விபத்துக்களில் 6 பேர் பலி

(கொழும்பு)

நாட்டின் சில இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவங்களில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் மோதிய 71 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை ஹப்புத்தளை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஹப்புத்தளை பஸ் தரிப்பிடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பாதசாரி ஒருவர் மீது தனியார் பேருந்து மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேயங்கொட தங்விலான பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் பயணம் செய்தவரே இச்சம்பத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டுபொத மூனமல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மற்றுமொரு மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகியதால் இந்த விபத்து இடம்பெற்றது.

அனுராதபுர பிரதேசத்திலும் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் நவகத்தேகம பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். (அ-2)

# போக்குவரத்து முறைகேடுகள் குறித்து 124 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

புத்தாண்டுக்காலத்தில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகள் தொடர்பில் 124 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் கடந்த ஒரு வார காலத்திற்குள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதிககட்டணம் அறிவிடல், பயணச்சீட்டு வழங்கப்படாமை, உரிய நேரத்தில் சென்றடைய வேண்டிய இடத்தைச் சென்றடையாமை, வரையறையற்ற முறையில் பயணிகளை ஏற்றுதல் மற்றும் குளிரூட்டிகள் செயற்படாமை போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இந்த முறைப்பாடுகளுக்கமைய பேருந்து சாரதிகள், நடத்துநர் மற்றும் உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பதிவு செய்யப்பட்ட அடையாள அட்டைகளை இரத்துச் செய்வதோடு போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# உலக புத்தக தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தினை முன்னிட்டு புத்தூர் எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், வாசகர்கள், சிறுவர்களின் நலன் கருதியும் நூலகத்தினை மேம்படுத்தும் நோக்குடனும் வலி.கிழக்கு பிரதேசசபை புத்தூர் பொதுநூலகத்தில் நூலக விழிப்புணர்வு கருத்தரங்குகள், கவிதை, பேச்சு, கலை நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு புத்தூர் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதென வலி. கிழக்கு பிரதேச சபைத்தலைவர் அ.உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-6)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 100

உக்ரேனில் ஜேர்மன் படையினர் தாக்குதல் நிலை வியூகம் அமைத்துள்ளனர்




### சென்டர் மற்றும் வடக்கு உக்ரேன் ஆகிய ஹிட்லர் படைத் தொகுதிகளின் முறியடிப்பு, பைலோருஷ்யா நடவடிக்கை (1944 ஜூன் 22- ஆகஸ்ட் 29)

1944 ஆம் ஆண்டின் பனிக்கால நடவடிக்கையில் கடும் தோல்வியடைந்தபின் ஜேர்மனிய உயர்மட்ட படைத் தலைமையகம், தனது துருப்புகளை பெரிதும் மாற்றியமைத்து, மீண்டும் முழு அணி திரட்டலை நடத்தி, தனது இராணுவத்தின் அளவை (டிவிஷன்களின் எண்ணிக்கை) ஆண்டின் ஆரம்பத்தில் எந்த மட்டத்தில் இருந்ததோ அதே மட்டத்திற்ககு கிட்டத்தட்ட புனர்நாட்டியது.

பாசிசக் கூட்டின் வசமிருந்த 326 டிவிஷன்களில் 239 டிவிஷன்கள் (23 டாங்கி, 7 இயந்திரப்படை டிவிஷன்கள் உட்பட ) 1944 ஜூலை வாக்கில் சோவியத்-ஜேர்மனியப் போர்முனையில் இருந்தன. இவற்றில் 181 டிவிஷன்கள் பாசிச ஜேர்மனிக்குச் சொந்தமானவை. 58 டிவிஷன்கள் இதன் துணை நாடுகளுக்கு உரித்தானவை. 20வது ஜேர்மனிய மலைப் படையின் ஒருபகுதி, 3 விமானப் படைகள், வடக்கிலும் பால்டிக், கருங்கடல்களிலும் இருந்த கடற்படைச் சக்திகளின் படைத்திரட்டு ஆகியன இதே போர்முனையில் இயங்கின. இவற்றில் 43 இலட்சம் பேர்கள் இருந்தனர். 59 ஆயிரம் சாதாரண மற்றும் மார்டர்பீரங்கிகளும் 7 ஆயிரத்து 800 டாங்கிகள், திடீர்தாக்குதல் பீரங்கிகளும் 3 ஆயிரத்து 200 போர்விமானங்களும் இருந்தன.


முக்கிய சக்திகளை குறிப்பாக டாங்கி டிவிஷன்களைப் பாசிஸ்டுகள் பிரிபியாத் ஆற்றின் தெற்கே நிறுத்தியிருந்தன. 1944 கோடைவாக்கில் பாசிச ஜேர்மனியப் படைத்தலைமை சோவியத் துருப்புகளின் அடுத்த தாக்குதலை தெற்கே எதிர்பார்த்தது தான் இதற்குக் காரணமாகும். உண்மையில் சோவியத் படைத்தலைமை பைலோருஷ்யாவில் தனது அடுத்த தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டது.

4ஆயிரத்து 500 கி.மீ. நீளமுள்ள பெரும் சோவியத்ஜேர்மனியப் போர்முனையில் சோவியத்தரப்பிலிருந்து 11சேனைக் கூட்டமைப்புகள், 3கடற்படைகள், 2 ப்ளீடுகள் மற்றும் வான் எதிர்ப்புப் பாதுகாப்பின் 2 சேனைகள் ஆகியவற்றைச் சேர்ந்த துருப்புகள் இயங்கின. சோவியத்துருப்புகளில் 461 துப்பாக்கிப்படை, வான் இறக்குபடை, குதிரைப்படை டிவிஷன்களும் 21 டாங்கி, இயந்திரப்படை கோர்பஸ்களும் இன்னும் பல யூனிட்டுகளும் பலப் பலப்படுத்தும் படைப்பிரிவுகளும் இருந்தன. இவற்றில 66 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர். 98 ஆயிரத்து 100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 7ஆயிரத்து 100 டாங்கிகள் தானியங்கிப் பீரங்கி அமைப்புகளும் 12 ஆயிரத்து 900 போர்விமானங்களும் இருந்தன.

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

சோவியத் யூனியனின் பரப்பிலிருந்து எதிரியை முற்றிலுமாக விரட்டி, ஹிட்லரின் கொடுமையிலிருந்து கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஐரோப்பிய மக்களை விடுவிக்கத் தொடங்குவது, யுத்தத்தை பாசிச ஜேர்மனியின் பரப்புக்கு மாற்றுவது என்பதுதான் 1944ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் இராணுவ நடவடிக்கைகளின் அரசியல் நோக்கமாக இருந்தது.

ஜேர்மனிக்கான வாயில்களை மூடிப்பாதுகாக்கும் நுழைவாயில்களாகிய பைலோருஷ்யாவில்-போர்த்தந்திரப் போர்முனையின் மத்தியில்-பிரதான தாக்குதலை தொடுக்கத் திட்டமிடப்பட்டது. எதிரியின் பெரும் சக்திகள்-சென்டர் படைத்தொகுதி- இங்கேயிருந்தன. மேற்கு உக்ரேனில் சோவியத் துருப்புகளின் தாக்குதல் இத்தாக்குதலுடன் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறாக சோவியத்துருப்புகளின் பிரதான படைத்திரட்டை கிழக்கு பிரசியா மற்றும் போலந்தின் எல்லைகளுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டது. பைலோருஷ்யாவிலும் மேற்கு உக்ரேனிலும் நடைபெற்ற தாக்குதல்களுக்கு ஆதரவாக பால்டிக் குடியரசுகளில் இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்படவிருந்தன.




உக்ரேனில்-ஜேர்மனியர்களின் வாகனங்களை சேதாமக்கி, அழித்த நிலையில்-போக்குவரத்து நெருக்கடியானபோது குதிரைகளைப் பயன்படுத்தும் சோவியத்படைகள்

முந்தைய நடவடிக்கைகளின் விளைவுகளையும் சோவியத்-ஜேர்மனியப் போர்முனையில் உருவாகியுள்ள திட்டவட்டமான போர்த்தந்திர நிலவரத்தையும் கணக்கில் கொண்டு அடுத்த நடவடிக்கைகளை யாஸ்ஸி-கிஷினேவ், புடாபெஸ்ட், பெட்சாமோ-கிர்கேனெஸ் நடவடிக்கைகள் மற்றும் பால்டிக் குடியரசுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை நடத்தத் திட்டமிடப்பட்டது.

1944 ஆம் ஆண்டு கோடை காலத்திற்கான பாசிச ஜேர்மனிய படைத்தலைமையின் திட்டம் அந்த ஆண்டு பனிக்கால திட்டத்தைப் போன்றே எதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒருபுறம் அமெரிக்கா, பிரிட்டனுக்கும் மறுபுறம் இவற்றிற்கும் சோவியத் யுனியனுக்கும் இடையேயான உறவுகளில் பிளவு ஏற்படும்வரை ஜேர்மனிக்குத் தொலைவிலுள்ள இடங்களில் சேனைக்கு எதிராக இழுபறி யுத்தத்தை நடத்துவது என்பதுதான் அக்கணிப்பாகும். பல படைவரிசைகளுடைய தற்காப்பை ஆதாரமாகக்கொண்டு தம் கைவசமுள்ள எல்லைகளில் உறுதியாக நிற்கும் கடமை ஹிட்லர் துருப்புகளின் முன் வைக்கப்பட்டது. (தொடரும்)


சோவியத்தின் செம்படைப் பொறியியலாளர்கள் தினேப்பர் ஆற்றின் குறுக்காக பாலம் அமைக்கிறார்கள்






தினேப்பர் ஆற்றின் உடைந்த பாலத்தின் மீதாக ஜேர்மன் படை தனது இயந்திரத் துப்பாக்கி சுடும் நிலையை அமைக்கின்றது

# 'நந்தன' புதுவருட இராசி பலன்கள்



## கடகம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

## உங்களைப் பொறுத்தவரை இவ்வாண்டு உன்னதமான ஆண்டாக அமையப் போகிறது

**வாழ்க்கையில் திருப்பம் தரும் குருப் பெயர்ச்சி!**

**யாரைஅணுகினால்காரியங்களில் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் கடக இராசி நேயர்களே!**

உங்களைப் பொறுத்தவரை, உங்கள் இராசியநாதன் சந்திரனைக் குரு பார்த்து ஆண்டின் தொடக்க நாள் அமைகிறது. விரயாதிபதி உச்சம் பெற அஷ்டமாதிபதி வக்ரம் பெற தொடங்கும் இந்த ஆண்டு உண்மையிலேயே உன்னதமான ஆண்டாக அமையப்போகிறது.

என்றாலும், சில மாதங்கள் கழித்து சனி மீண்டும் 4 இல் சஞ்சரிக்கப் போகிறார். அர்த்தாஸ்டம சனியின் ஆதிக்கம் மீண்டும் தலை தூக்கப் போகின்றது. அந்த நேரத்தில் தேவையில்லாத வீண் குழப்பங்களும் மனச்சஞ்சலங்களும் தேடிவந்து கொண்டே இருக்கும்.

அந்த நேரத்தில் வரும் இனம் புரியாத கவலைகளைபோக்க இறை வழிபாட்டை முறையாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குடும்ப பொறுப்பை வாழ்க்கை துணையிடம் ஒப்படைக்க முன்வருவீர்கள். தேக நலன் கருதி புதிய மருத்துவ சிகிச்சைகளை நாடுவீர்கள். குரு பெயர்ச்சிக்கு பின்னால் உங்கள் இராசிக்கு 5 இல் குருவின் பார்வை பதிவதால் அதன் பின்னரே சகல வழிகளிலும் நன்மைகள் அதிகம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### சிறிய விடயத்தை பெரிதாக்கி பார்ப்பீர்கள்!

எதையும் ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்துச் செயற்படுபவர்கள் நீங்கள். உங்கள் மனதில் புதுப்புது கருத்துக்கள் தோன்றி கொண்டே இருக்கும். மனோசக்தி மிக்க நீங்கள் தன்னம்பிக்கையை மட்டும் கூட்டிக் கொண்டால் தரணியில் புகழ்பெற்ற மனிதர்களில் முதலிடம் பிடிப்பீர்கள்.

பெரிய விடயங்களைப் பற்றி பேசாமல் விட்டுவிடுவீர்கள். சிறிய விடயங்களைப் பெரிதாக்கி பார்த்து பேசுவீர்கள்.

உங்களுக்கு இந்த புத்தாண்டு எப்படி இருக்கும்? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி மூன்று வரை!

ஆண்டின் தொடக்கத்தில் குருச் சந்திர யோகமும், குரு மங்கள யோகமும் இருக்கிறது. ஆயினும் குரு பத்தில் அல்லவா சஞ்சரிக்கிறார், எனவே, பொறுப்புகள் மாறுவதும், இருப்புகள் கரைவதும் விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படுவதும் இயல்பானதாகவே அமையும்.

மூன்றில் சனி வக்ரம் பெறுவதால் சகோதரர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். தொழில் வளர்ச்சிக்கு கைகொடுக்க புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியும் வந்துசேரலாம். ஆச்சரியப்படக்கூடிய செய்தியும் வந்து சேரலாம்.

### குருப்பெயர்ச்சி தரும் பலன்கள்?

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று சொல்லப்படும் குரு உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். அவர் இதுவரை 10 இல் சஞ்சரித்து பதவிகளில் சில மாற்றங்களை கொடுத்திருக்கலாம். இனி பதினோராமிடத்தில் சஞ்சரித்து, உங்கள் மதிநுட்பத்தால் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் மகத்தான அளவில் வெற்றிகளை பெற வைக்கப் போகிறார்.

பதினோராம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு இலாபஸ்தான குரு என்று அழைக்கப்படுகிறார். எனவே, வரவு

**சிவல்புரி சிங்காரம்**

வந்துகொண்டே இருக்கும். வளர்ச்சிப் பாதைக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பும் வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வெளிநாட்டு பயண வெற்றிகரமாக நிறைவேறும். உதிரி வருமானங்களை உள்ளம் மகிழக் கொண்டுவந்து சேர்க்கும் குருவைப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே பார்த்து வழிபட்டு வந்தால், பெருமைக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும்.

உங்கள் இராசிக்கு பதினொன்றில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடத்து ஆதிபத்தியங்கள் எல்லாம் அற்புதமாக நடைபெற வைத்துவிடும்.

குறிப்பாக, சகோதர சகாயஸ்தானம், புத்திரஸ்தானம், களத்திரஸ்தானம் ஆகியவை புனிதமடைய போகின்றன. இதன் விளைவாக, நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

சகோதர ஒத்துழைப்புக் கிடைத்து தக்க விதத்தில் வாழ்க்கை பாதையை அமைத்துக் கொள்ளபோகிறீர்கள்.

### செவ்வாய் சனி சேர்க்கை காலம்!

கன்னி இராசியில் செவ்வாயும், சனியும் சேரும் நாட்கள் மட்டும் நீங்கள் கூடுதல் கவனத்துடனும் செயற்பட வேண்டும். அந்த நிகழ்வு ஆனி 9 முதல் ஆடி 29 வரை இருக்கிறது. சகோதர ஸ்தானத்தில் ஒன்றுகூடும் இந்த கிரகங்களால் பொருள் இழப்புகளும் விரயங்களும் உருவாகலாம்.

பொல்லாதவர்களின் சிநேகிதத்தால் இல்லத்தில் குழப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஆபரணங்கள் வாங்கிசேர்க்கும் எண்ணம் மேலோங்கும். எதை சொன்னாலும் யோசித்து சொல்வது நல்லது.

### துயரங்களைப் போக்குமா துலாம் இராசிச்சனி!

ஆவணி 27 ஆம் திகதி முதல் துலாம் இராசிக்குள் உச்சம்பெறும் சனி உங்களுக்கு நன்மை, தீமைகளை கலந்தே வழங்குவார். சொத்துக்களை வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். விற்கும் சூழ்நிலையும் உருவாகும்.

சொந்தங்களை பகை பாராட்டாமல் நடந்து கொள்வது நல்லது. வாகனங்கள் வைத்து இருப்பவர்கள் கவனமுடன் ஓட்டிச்செல்வதோடு, வாகன மாற்றமும் செய்ய முன்வர முயற்சிப்பர். தாய்வழி தொல்லைகளை சந்திக்க நேரிடும்.

### வக்ர குரு வரவை கொடுக்குமா, செலவைக் கொடுக்குமா?

புரட்டாதி 26 ஆம் திகதி முதல் தை 24 ஆம் திகதி வரை இடபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 6,9 க்கு அதிபதியாக குரு விளங்குவதால், வராத கடன்கள் வசூலாகும். எதிரிகள் விலகுவர். உடல் ஆலோக்கியத்துக்கு இரண சிகிச்சை செய்வது தான் நல்லது என்று சொன்ன மருத்துவர்கள் இனி சாதாரண சிகிச்சையிலேயே நோய் குணமாகி விடும் என்று ஒரு ஆச்சரியப்படத்தக்க செய்தியைத் தருவர்.

பங்காளி பகைகள் உருவாவதை தவிர்க்க முடியாது. தந்தைவழி விரோதங்களும், விற்ற சொத்துக்களால் பிரச்சினைகளும் உருவாகலாம். சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதன் மூலம் சிக்கல்களிலிருந்து விடுபட இயலும். அரசியலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

### பாம்புகிரக பெயர்ச்சி பக்க பலமாக இருக்குமா?

கார்த்திகை 17 ஆம்திகதி துலாம் இராசியில் ராகுவும், மேஷ இராசியில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். இந்த கிரக பெயர்ச்சி உங்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை கொடுக்க போகிறது. உத்யோகத்தில் இருப்பவர்களும் புதிய கூட்டாளிகளுடன் இணைந்து தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

நான்காமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் இராகு தாயின் உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தி அகற் றுவார். பயணங்கள் அதிகரிக்கும். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

துலாம்ராகு தொ[illegible] காரியத்தில் வெற்றியடைய வைக்க முறையான இராகு பரிகாரங்களை செய்வது நல்லது.

அர்த்தாஷ்டம இராகு என்பதால், சர்ப்ப சாந்தியை யோகபலம் பெற்ற நாளில் செய்தால், சொல்வத்தை அது அள்ளிக்கொடுக்கும். பழைய வாகனங்களை கொடுத்து, புதிய வாகனங்களை வாங்கி மகிழ உகந்த நேரமிது.

### வக்ர சனியால் ' வளர்ச்சி ஏற்படுமா?

சித்திரை 1 ஆம்திகதி முதல் ஆனி 6 ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம்திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் சனி 7, 8 க்கு அதிபதியாவார். அஷ்டமாதிபதி வக்ரம் பெற்றால் யோகம்தான் என்றாலும், சப்தமாதிபதியாகவும் அல்லவா சனி சஞ்சரிக்கிறார். எனவே, வந்த வரன்கள் வாயிலோடு திரும்பி விடலாம். எந்த நேரத்திலும் வாழ்க்கை துணையோடு மோதல் உருவாகலாம். ஆகவே, அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. சேமிக்கத்தான் முடியாதே தவிர சொலவிற்குப் பணம் வந்துகொண்டே இருக்கும்.

சனிக்குரிய சிறப்பு ஸ்தலங் களில் முதல் சுற்று நடப்பவர்கள் அதற்குரிய கோவிலுக்கும், இரண்டாவது சுற்று அர்த்தாஷ்டம சனி நடப்பவர்கள் அதற்குரிய கோவிலுக்கும், மூன்றாவது சுற்று அர்த்தாஷ்டம சனி நடப்பவர்கள் அதற்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொண்டால் தான் தோல்வியில் துவளாமல், வெற்றியில் ஒட்டிக் கொள்ள இயலும்.

### வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!

திங்கட்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று மங்கலம் தரும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமையன்று விநாயகர் சந்நிதியில் விநாயகர் கவசமும் அனுமன் சந்நிதியில் அனுமன் கவசமும் சனீஸ்வரர் சந்நிதியில் சனீஸ்வரர் கவசமும் பாடி வழிபட்டு வாருங்கள்.

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்த நந்தன வருடத்தில் பணப்புழக்கம் சீராகஇருக்கும். பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். வேலைப்பளு அதிகரிக்கும். வியாழனின் பெயர்ச்சிக்கு பின்னால், விரும்பிய பொருட்களை விரும்பிய நேரத்தில் வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் மாறும். தாய் வீட்டோடு இருந்த போராட்டம் அகன்று, தானாகவே அவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் மட்டும் சகோதரர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. இந்த ஆண்டு சர்ப்பக்கிரகங்களின் ஆதிக்கம் உங்




களுக்கு அதிகமாக இருப்பதால் பெண் குழந்தைகளின் குணத்தில் மாறுபாடுகள் தோன்றலாம். குழந்தை வளர்ப்பில் கூடுதல் கவ்னம் தேவை. 'சர்ப்பசாந்தி செய்வதும், நந்தி வழிபாட்டை' மேற்கொள்வதும் சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்)

**NORTHLANKAIIT & ISLES INTERNATIONAL UNIVERSITY**

JAFFNA, SRI LANKA — இணைந்து வழங்கும் UK, IRELAND, MALAYSIA, KENYA & ST.KITS & NEVIS

# மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

## விண்ணப்பித்துவிட்டீர்களா!!!

வெல்லுங்கள்!

10 % முதல் 70 % வரை கற்கைநெறிக் கட்டணம் Free!

COURSES:- 5வது Batch இல் இணையுங்கள்!

- B.Sc. in Computer Science — Duration: 1 ---- 3 Years A/L / O/L
- B.Com with Computer App.
- P.G.Dip. in Comp. Sc. >> M.Sc. — Duration: 1 Year Any Degree
- MBA >> DBA — Duration: 1 ---- 3 Years Any Degree

PG Diploma MBA, M.Sc. 2வது Batch இல் இணையுங்கள்!

நீங்கள்.. ஏதேனுமொரு துறையில் HND OR Advanced Diploma OR IT துறையில் 2 வருட கற்கைநெறியைப் பயின்ற தகமையுள்ளவரா?

ஒரு வருடத்தில் B.Sc. கணினிப்பட்டத்தினை அல்லது B.Com. with Computer Application பெற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு!

சர்வதேச தரம் வாய்ந்ததென்று எச் சந்தர்ப்பத்திலும் நிரூபித்துவரும் பட்டச்சான்றிதழ்கள்

இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். UGC

எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

## NORTH LANKA IIT

#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774



## சாந்தம் வைத்தியசாலை









Dr.S.Raviraj (Consultant Surgeon) @ Santham Hospital Opening Ceremony







யாழ் மண்ணில் ... புதிய உதயம் ...

## எமது சேவைகள்!

- OPD - காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை
- IPD
- X - RAY
- ECG
- COLOUR SCANNING
- PHARMACY
- MODERN MEDICAL LABORATORY
- AMBULANCE
- SPECIALIST VISIT







விசேட பொது வைத்திய நிபுணர் - VP
விசேட மகப்பேற்று நிபுணர் - VOG
விசேட சத்திரசிகிச்சை நிபுணர் - SURGEON
விசேட தோல்வைத்திய நிபுணர் - SKIN SPECIALIST
விசேட கண் வைத்திய நிபுணர் - EYE SURGEON
விசேட காது, மூக்கு, தொண்டைவைத்திய நிபுணர் - ENT SURGEON
குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் - PEADIATRICIAN

மேற்படி வைத்திய நிபுணர்களின் சேவையை முற்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**HOME VISIT** உங்கள் அன்புக்குரியவர்கள் நடமாட முடியாது இருந்தால் அவர்களுக்கு நாங்கள் உங்கள் வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிப்போம்.

## SANTHAM HOSPITAL

No.126 , 3rd Cross Street, Jaffna

Tele Phone: 021 56 777 56
021 56 765 77
Hotline: 077 376 7044

(SC-5963)

# இந்தியா இலங்கைக்கு விடுத்த எச்சரிக்கை

இந்திய எம்.பி.க்கள் குழு வருகின்ற ஏப்ரல் 16 ஆம்திகதி இலங்கைக்கு வரஇருக்கிறது. நாடாளுமன்ற எதிர்க் கட்சி தலைவரும், பாரதீய ஜனதா கட்சியின் மிக முக்கிய தலைவருமான சுஸ்மா ஸ்வராஜ் தலைமையிலான இக் குழுவில் தமிழக எம்.பி.க்கள் பங்கேற்கிறார்கள். குறிப்பாக தமிழகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்களான சுதர்சன நாச்சியப்பன், எம்.கிருஷ்ணசாமி, மாணிக்க தாகூர், ஏன்.எஸ்.வி.சித்தன் உள்ளிட்ட நான்குபேர் இடம் பெறுகிறார்கள். வட தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி.கிருஷ்ணசாமி என்றால், மீதியுள்ள மூன்று காங்கிரஸ் எம்.பி.க்களும்தென் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இதில் சுதர்சனன் நாச்சியப்பன் ராஜ்யசபை எம்.பி. என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய அண்ணன் மகன்தான் மாணிக் தாகூர் இந்த நால்வருமே ராஜீவ் காந்தியின் படுகொலை இடம் பெற்றதிலிருந்து தமிழகத்தில் இலங்கை தமிழர் ஆதரவாளர்களுக்கு எதிரான கருத்துக்களை சொல்லி வந்தவர்கள். தி.மு.க. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் எம்.பி.க்கள் இக்குழுவில் இடம் பெற்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சி சார்பில் அதிக எம்.பி.க்கள் இடம் பெற்றிருப்பது பற்றியே இலங்கைத் தமிழர் ஆதரவாளர்கள் மத்தியில் தமிழகத்தில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. அதே நேரத்தில் மொத்த எம்.பி.க்கள் குழுவில் தமிழகத்திலிருந்து ஏழு பேரும், வட மாநிலங்களில் இருந்து ஏழு பேரும் பங்கேற்கிறார்கள். இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக எம்.பி.க்களும், வடமாநில எம்.பி.க்களும் ஒரே மாதிரியான கருத்தை கொண்டிருப்பார்களா என்ற கேள்வியும் தமிழக தலைவர்கள் மத்தியில் எழுந்திருக்கிறது.





இலங்கைக்கு தமிழக மற்றும் இந்திய எம்.பி.க்கள் குழு செல்லவிருக்கின்ற நிலையில், சொன்னையிலிருந்து 350 கி.மீ.க்கு அப்பால் இருக்கும் திருச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் மத்திய அரசின் பட்ஜெட் விளக்கக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய உள்துறை அமைச்சர், "ஐ.நா.வின் மனித உரிமை கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க இந்தியா-இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டது. மற்ற நாடுகளை ஆதரிக்க வைப்பதற்கும் அது தேவைப்பட்டது. ஏனென்றால், ஒரு நாடு, மாறி வாக்களித்திருந்தால், நாம் *மைனாரிட்டி* ஆகியிருப்போம். அண்டை நாடு (இலங்கை) *மெஜாரிட்டி* ஆகியிருக்கும்" என்று அதிரடியாகப் பேசினார். அது மட்டுமன்றி, "இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க இந்தியா விரும்புகிறது என்று அறிவித்தோம். அதற்கு என்ன அர்த்தம். அது மற்ற நாடுகளுக்கு நாம் விடுத்த செய்தி. குறிப்பாக, இலங்கை ஜனாதிபதிக்கு விடுத்த செய்தி எச்சரிக்கை." என்றவர், "அந்தத் தீர்மானத்தில் ஒரு வார்த்தை தவறியிருந்தால், நாம் தப்படி போட்டிருந்தால், நிலைமை வேறு மாதிரியாக மாறியிருக்கும்" என்றார் அணித்தரமாக. ஜனீவா வாக்கொடுப்பிற்கு பிறகு தமிழக காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவராகவும், மத்திய உள்துறை அமைச்சராகவும் இருப்பவருமான ப.சிதம்பரம் இப்படி ஆவேசமாகவும், அதிரடியாகவும் பேசியது மற்ற அரசியல் கட்சி தலைவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, இதுவரை இலங்கை தமிழர் பிரச்சினையில் துரோகம் செய்துவிட்டது என்று காங்கிரஸ் கட்சிமீது கடும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தன. தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் ஆதரவு அமைப்புகள், அவர்களின் கைகளில் இருந்த அந்த பிரசார ஆயுதத்தை ஜெனீவா வாக்கெடுப்பில் காங்கிரஸ் தலைமையிலான மத்தியு அரசு எடுத்த நிலைப்பாடு, பறித்துக் கொண்டு போய்விட்டது.

ஜெனீவா வாக்கெடுப் பிற்கு பிறகு தமிழகத்தில்உள்ள இலங்கை தமிழர் ஆதரவு அமைப்புகளின் தலைவர்கள் மத்திய அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்பது நின்றுள்ளது. "மத்திய அரசு ஏதோ செய்ய முனைகிறது" என்ற எண்ணம் அவர்கள் மனதில் தோன்றியிருக்கிறது. அதை சாதகமாக்கிக் கொள்ள நினைக்கும் காங்கிரஸ் கட்சி திருச்சியில் முதலில் இப்படி ஒரு கூட்டத்தை கூட்டி இலங்கை தமிழர் பிரச்சினையில் நாங்கள் படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்ற செய்தியை பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமானை எதிர்த்து பிரச்சாரம் செய்ய இதுவரை தயங்கி வந்த காங்கிரஸ் கட்சி இப்போதெல்லாம் ஆங்காங்கே பேனர்கள் வைத்தும், கூட்டம் போட்டும். சீமான்மீது பாயத் தொடங்கியுள்ளது. இன்று அம்பேத்கார் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஒன்றை தமிழக காஙகிரஸ் கமிட்டி சென்னையில் ஏற்பாடு செய்திருக்கிறது. அக்கூட்டத்திலும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பேசப் போகிறார். அதிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய நிலைப்பாடு குறித்த பேச்சு இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தமிழக காங்கிரஸ் தலைவர் ஒருவர், "இதுவரை காங்கிரஸ் கட்சிதான் இலங்கைத் தமிழர்களுக்கு பல நன்மைகளைச் செய்துள்ளது. போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான மறுசீரமைப்பு பணிகளில் மத்திஅரசு-இலங்கை அரசுடன் இணைந்து பல உதவிகளை செய்து வருகிறது. இலங்கை தமிழர்களுக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு என்பதை இன்றும் உறுதியுடன் சொல்லிவரும் ஒரே கட்சி காங்கிரஸ் கட்சிதான். அதற்காக நாங்கள் எங்கள் இளம் தலைவர் ராஜீவ்காந்தியின் கொலையை மறக்க முடியாது. அது வேறு. இலங்கை தமிழர்களுக்காக நாங்கள் உதவி செய்வது வேறு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் எப்படியோ, காங்கிரஸ்தான் *இலங்கை தமிழர்களைக் கொன்றது* என்ற ரீதியில் பிரச்சாரம்செய்து எங்கள் கட்சி, *தீண்டத்தகாத கட்சி* என்பது போன்ற நிலைமையை தமிழகத்தில் ஏற்படுத்திவிட்டார்கள். அதற்கு அ.தி.மு.க உள்ளிட்ட மற்ற கட்சிகள் காரணம் என்றாலும், எங்களுடன் மத்திய அரசில் பங்கேற்கும் தி.மு.க.வும் காரணம். ஆகவே, இப்போது ஜெனீவா வாக்கெடுப்பை நாங்கள் நிச்சயம் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமாக்கிக் கொள்ளப் பாடுபடு வோம். விரைவில் பேச்சாளர் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப் போகிறோம். அதில் இலங்கைத் தமிழர்களுக்கு காங்கிரஸ் செய்த உதவிகள் என்னென்ன என்பதைப் பட்டியலிட்டு பட்டி தொட்டியெல்லாம் தமிழகத்தில் பிரச்சாரம் செய்யப்போகிறோம்." என்றார் வித்தியாசமாக.

தி.மு.க. சீனியர் தலைவர் ஒருவரோ, "இதுவரை இலங்கை சென்றது தமிழக எம்.பி.க்கள் குழுவாக இருந்தது. இதுவும் வெறும் தமிழக எம்.பி.க்களை மட்டும் பங்கேற்கும் குழுவாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை. இப்போது இந்திய எம்.பி.க்கள் குழு என்ற நிலையில் நாங்கள் இலங்கை செல்கிறோம் ஆகவே, இலங்கை சென்று அங்குள்ள தமிழர்களின் நிலைமைகளை பார்த்து வந்த பிறகே கருத்து எதுவும் சொல்ல முடியும். ஆனாலும், எங்கள் தலைமையைப் பொறுத்தமட்டில் இந்தக் குழுவினால் எல்லாம் எதுவும் சாதிக்க முடியாது என்ற எண்ணத்திலேயே இருக்கிறது. அது மட்டுமின்றி மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இந்தியா வாக்களித்த பிறகு இந்திய எம்.பி.க்கள் குழு இலங்கை செல்கிறது. தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை இந்திய எம்.பி.க்கள் குழுவே வந்து பார்வையிட்டு விட்டது, என்று மற்ற உலக நாடுகளிடம் கூறி, இலங்கை நல்ல பெயர் வாங்கிக் கொள்ளவே இந்த எம்.பி.க்கள் குழுவின் பயணம் பயன்படும் என்றே எங்கள் தலைவர் கலைஞர் நினைக்கிறார். அதேபோல நாங் களும் நடவடிக்கை எடுத்தோம் என்று கூறுவதற்கு மத்திய அரசுக்கு ஒரு வாய்ப்பாக இது அமையும். இந்நிலையில், குழு பயணத்தை புறக்கணித்தோம் என்ற பெயர் வர வேண்டாம் என்ற எண்ணத்திலேயே எங்கள் கட்சி எம்.பி.யை பங்கேற்க வைத்துள்ளார் தலைவர்" என்றார்.

ஆனால், இலங்கைக்கு இந்திய எம்.பி.க்கள் குழு செல்லவிருக்கின்ற நிலையில் "ஜெனீவா வாக்கெடுப்பில் இந்தியாவின் நிலைப்பாடு ஜனாதிபதிக்கு விடுக்கபட்ட எச்சரிக்கை" என்ற ரீதியில் இந்திய உள்துறை அமைச்சரும், இலங்கை பிரச்சினை தொடர்பான போச்சுவார்த்தைகளில் ஆரம்பகாலம் தொட்டே ஈடுபாடு உள்ளவருமான ப.சிதம்பரம் கூறியிருப்பது, தமிழகத்தில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இக்குழு இலங்கை செல்வது இப்போது உகந்த நேரமல்ல என்று உள்துறை அமைச்சரே நினைக்கிறாரோ என்ற எண்ணத்தை இந்த பேச்சு தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல் தீர்மானம் நிறைவேற வாக்களிக்கவேண்டும் என்று தீவிரமாக போராடியவர் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். ஆனால், இந்த இந்திய எம்.பி.க்கள் குழுவில் தமிழக காங்கிரஸில் உள்ள அவரது ஆதரவு எம்.பி.க்களான விஸ்வநாதன், கே.எஸ். அழகிரி போன்றோர் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு நாடு மாறி வாக்களித்திருந்தால், நாம் மைனாரிட்டி ஆகியிருப்போம்

நன்றி: இணையம்

# முதல்வர் ஜெயலலிதாவுக்கு பழ.நெடுமாறன் பாராட்டு



இலங்கை செல்லும் இந்திய நாடாளுமன்றக் குழுவில் அ.தி.மு.க. இடம் பெறாது என்று முதல்வர் ஜெயலலிதா எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

அவர் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை செல்லும் இந்திய நாடாளுமன்றக் குழுவில் அ.தி.மு.க. இடம்பெறாது என முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருப்பதை வரவேற்கின்றேன்.

இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் இடம்பெற வேண்டிய பல கட்சிப் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை.

எடுத்துக்காட்டாக இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா புறக்கணிக்கப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

இந்த நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ள பலரும் அரசின் நிலைக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள். குழுவின் தலைவராக உள்ள சுஷ்மா ஸ்வராஜ் பெரும் பான்மையினரை மீறி எதுவும் செய்ய இயலாது என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில் வெறும் கண் துடைப்பு நடவடிக்கையாகச் செல்லும் இந்தக் குழுவில் அ.தி.மு.க. இடம்பெறாதது தமிழக மக்களின் ஒட்டு மொத்தக் கருத்தை பிரதிபலிப்பதாகும் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# தென்னிந்திய கூடங்குளம் அனுமின் உலையால் இலங்கையின் வடபகுதிக்கே அதிக பாதிப்பு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிந்தியாவில் நிறுவப்பட்டுள்ள அணுமின் நிலையத்தால் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால் இலங்கையின் வடக்குப் பகுதிகளே அதிகளவில் பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளன என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்குப் பகுதியில் கதிர்வீச்சை அளவிடும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான கரையோரப் பகுதிகளிலே இந்தப் பணிகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் கதிர்வீச்சின் அடிப்படை அளவை கண்டறிவதும் அதனை அடிப்படையாக வைத்து உள்ளூர் அதிகாரிகள் மூலம் தொடர்ச்சியாக கதிர்வீச்சு அளவை கண்காணிப்பதற்குமே இந்த அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக இந்தக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் கதிர்வீச்சின் அளவில் ஏதேனும் மாற்றம் தென்பட்டால் இலகுவாக அடையாளம் காண முடியும். கதிர்வீச்சின் அடிப்படை அளவீட்டுப் பணிகள் ஒரு ஆண்டில் முடிவடையும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். மன்னார் நகரில் இருந்து சுமார் 250 கி.மீ.தொலைவில் உள்ள கூடங்குளத்தில் இந்த அணுமின் நிலையம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசியலில் என்னை குற்றவாளியாக பார்க்கின்றனர் - கலங்கிய சீமான்

பொதுவாக சினிமாவில் என்னை பொலிஸ் ஆகப் பார்க்கின்றார்கள். ஆனால், அரசியலில் என்னை ஒரு குற்றவாளியாகவே பார்க்கின்றார்கள் என்று தனது ஆதங்கத்தை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கண்டுபிடி கண்டுபிடி படத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைவரும் இயக்குநரும் தமிழீழ ஆதரவாளருமான சீமான் பொலிஸ் ஆய்வாளராக நடித்துள்ளார்.

குறித்த படத்தின் செய்தியாளர் சந்திப்பு நேற்றைய தினம் சென்னையில் இடம்பெற்றது. செய்தியாளர் சந்திப்பில் சீமான் முக்கியமாகத் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

நான் இதுவரை 5 படங்களில் நடித்துள்ளேன். இதில் 3 படங்களில் பொலிஸ் வேடத்தில் நடித்துள்ளேன்.

உச்சிதனை முகர்ந்தால் படத்தில் பொலிஸ் வேடத்தில் நடித்த போது அப்படத்தின் இயக்குநர் புகழேந்தி. தங்கராஜ் என்னிடம் பேசிக்கொண்டிருக்கையில், கண்டுபிடி கண்டுபிடி படத்தில் என்ன வேடத்தில் நடிக்கிறீர்கள் என்று கேட்டார்.

அதிலும் பொலிஸ் வேடம் தான் என்று சொன்னேன். பொதுவாக சினிமாவில் என்னை பொலிஸாக பார்க்கிறார்கள். ஆனால், அரசியலில் என்னை ஒரு குற்றவாளியாகவே பார்க்கிறார்கள். (அ-2)




★ 1699-கால்சா என்ற சீக்கிய அறப்படை இயக்கத்துக்கு குருகோவிந்த் சிங்க அடிக்கல் நாட்டிய நிகழ்வு இடம்பெற்றது.

★ 1828-நோவா வெப்ஸ்டர் தனது அகராதியின் முதலாவது பதிவுக்கான காப்புரிமையைப் பெற்றுக் கொண்டார்.

★ 1849-ஹங்கேரி ஆஸ்திரியாவிலிருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1865-அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஜோன் வில்க்ஸ் பூத் என்பவனால் சுடப்பட்டார்.

★ 1894-தொமஸ் எடிசன் ஒளிப்படங்களைப் பாவித்து அசையும் படக்காட்சியை காட்டும் கினட்டஸ்கோப் என்ற அசையும் ஒளிப்படக்கருவியை காட்சிப்படுத்தினார்.

★ 1912-பிரித்தானியாவின் பயணிகள் கப்பல் டைட்டானிக் வட அட்லாண்டிக் கடலில் பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. அடுத்த நாள் இது ஆயிரத்து 503 பேருடன் கடலில் மூழ்கியது.

★ 1915-துருக்கி ஆர்மீனியாவை முற்றுகையிட்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர் பிரித்தானிய கடற்படையினர் நோர்வேயின் நம்சோஸ் என்ற இடத்தில் தரையிறங்கினர்.

★ 1944-மும்பை துறைமுகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 300 பேர் உயிரிழந்தனர்.

★ 1958-சோவியத்தின் ஸ்புட்னிக் 2 என்ற செய்மதி 162 நாட்கள் பூமியைச் சுற்றிய பின்னர் சுற்று வட்டத்தில் இருந்து வீழ்ந்தது.

★ 1978-ஜோர்ஜியாவில் ஜோர்ஜிய மொழியின் அரசியல் அந்தஸ்தை மாற்றும் சோவியத் ஆட்சியாளரின் முயற்சிக்கெதிராக திபிலீசியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

★ 1986-மேற்கு பெர்லினில் ஏப்ரல் 5 இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்கப் படைவீரர் இறந்ததற்குப் பழிவாங்கும் முகமாக ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் உத்தரவின் பேரில் ஐக்கிய அமெரிக்கா லிபியாவில் குண்டுவீச்சை நிகழ்த்தியதில் 60 பேர் உயிரிழந்தனர்.

★ 1986-வங்காள தேசத்தில் ஒரு கிகி எடையுள்ள பனிக்கட்டி மழை பொழிந்ததில் 92 பேர் உயிரிழந்தனர்.

★ 1988-சுவிட்சர்லாந்தில் ஜெனீவாவில் ஐ.நா. அவையில் இடம்பெற்ற நிகழ்வில் சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெறும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டது.

★ 1999-யூகொஸ்லாவியாவில் நேட்டோ படைகள் அல்பேனிய அகதிகளை ஏற்றிச் சென்ற ஊர்தி ஒன்றின் மேல் குண்டுவீச்சு நடத்தியதில் 75 பேர் உயிரிழந்தனர்.

★ 1999-அவுஸ்திரேலியா சிட்னியில் பலமான பனிக்கட்டி மழை பொழிந்ததில் A$1.7 பில்லியன் பெறுமதியான சேதம் ஏற்பட் டது.

★ 2007-தாய்லாந்து நீர்வீழ்ச்சியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 35 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1629-கிறிஸ்டியான் ஹைஜன்ஸ், டச்சு கணிதவியலாளர் (இ.1695)


★ 1891-அம்பேத்கர், இந்திய சட்ட நிபுணர் (இ.1956)

★ 1922-அலி அக்பர் கான், இந்துஸ்தானி இசைக் கலைஞர் (இ.2009)

★ 1927-அலன் மக்டேர்மிட், நோபல் பரிசு பெற்றவர்

### இறப்பு


★ 1930-விளாடிமீர் மயக்கோவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (பி.1893)



★ 1950-தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி ரமண மகரிஷியின் நினைவு தினம் (பி.1879)

# அதிசய உலகம்...


## டைனோசர் கால பறவையின் பல் படிமம் கண்டுபிடிப்பு



உலகிலேயே மிகப்பெரிய பிரமாண்டமான கூர் மையான பல் படிமம் ஒன்றை இங்கிலாந்தில் உள்ள விஞ்ஞானிகள் கண்டெடுத்து உள்ளனர். இது 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உள்ள படிமம். லண்டனில் இயற்கை வரலாறு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

இதை ஆரம்ப டைனோசர் காலத்தில் இருந்தது போன்ற பறக்கும் பெரியவகை பறவையினத்தை சேர்ந்த பெட்ரொசாவுர்சின் பல் படிமம் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், இது முழுமையாக ஆராயப் படாமல் இருந்தது.

## உலகிலேயே மிகப் பெரிய வண்டு




உலகிலேயே மிகப்பெரிய வண்டு Goliathus cacicus எனப் படும் வண்டினம் தான். இது ஐவரி கோஸ்ரை Lvory coast இனை தாயகமாக கொண்டது. இதில் ஆண் வண்டுகள் 5 தொடக்கம் 10 சென்றிமீற்றர் வரை நீளமானவை. பெண் வண்டுகள் பொதுவாக 7 சென்ரி மீற்றர் அளவிலானவை.

## பணத்தை வைத்து வீடு கட்டிய ஓவியர்



பொதுவாக வீடு மற்றும் அலுவலக கட்டடங்களை செங்கல், சீமெந்து, மணல் கொண்டு கட்டுவதுதான் வழக்கமாக இருந்து வருகி றது. சில இடங்களில் மரத்தை கொண்டு அமைப்பதுண்டு.

இதேநேரத்தில் அயர்லாந்து நாட்டில் டுப்ளின் நகரை சேர்ந்த பிராங் புக்லீய் என்பவர் கிழிந்த பண நோட்டுக்களை கொண்டே வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறார். செங்கல்களுக்கு பதில் பணம் நோட்டுகளை அடுக்கி இந்த வீடு அமைந்திருக்கிறது.

இதற்காக அவருக்கு அந்த நாட்டின் மத்திய வங்கி ரூ.8 ஆயிரத்து 200 கோடி மதிப்புள்ள (1.4 பில்லியன் யூரோ) கிழிந்த நோட்டுக்களை வழங்கியுள்ளது. மேலும் கதவு, யன்னல் அமைப்பதற்கான மரங்களை நண்பர்கள் சிலர் நன்கொடையாக கொடுத்து உதவி இருக்கிறார்கள்.

இந்த உதவிக்கரத்தால் பிராங் தனது 3 அறைகளைக் கொண்ட இல்லத்தை வெறும் ரூ.2100 செலவிலேயே வெற்றிகரமாக கட்டி முடித்துவிட்டார். ஓவியரான அவர் இந்த வீட்டை நேரில் வந்து பார்த்து ரசியுங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுக்கிறார்.

## ஓட்டப்பந்தயத்தில் கலக்கும் ஆடுகள்



பல்வேறு பந்தயங்களில் கலந்து கொள்வதில் மனிதர்களே பெரும்பாலும் ஈடுபடுவதுண்டு. தற்போது காணப்படும் மக்கள் தாம் வளர்க்கும் செல்லப்பிராணிகளையும் பல்வேறு பந்தயங்களில் ஈடுபடுத்துகின்றனர்.

அவ்வாறு தெற்கு கரீபியன் கடல்பகுதியில் தொபாகோ தீவில் திருவிழாவின் போது ஆடுகள் ஓட்டப் பந்தயம் நடத்துவது வழக்கம். இதில் பங்கேற்ற ஆடுகளை துரத்தியபடி அதன் உரிமையாளர்களும் ஓடுவதைப் படத்தில் காணலாம்.

## மிகப் பெரிய காய்கறிகள் இங்கிலாந்து கண்காட்சியில்



இங்கிலாந்து நாட்டின் ஹாரோகேட் என்ற நகரில் இலையுதிர் பருவகால மலர் கண்காட்சி நடைபெற்றது. இதில் உலகின் மிகப் பெரிய காய்கறிகள் வலம் வந்தன. அதில் வெங்காயம் ஒன்றின் எடை 8 கிலோ 150 கிராம் ஆகும்.

## செவ்வாயில் யானையின் தோற்றம் பாறையில்



செவ்வாயில் யானை போன்ற ஒரு உருவம் உள்ளதாக செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படத்தால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சிவப்பு கிரகம் என அழைக்கப்படும் செவ்வாய்க் கிரகத்தில் யானை போன்ற ஒரு உருவம் பாறை ஒன்றில் பதிவாகியுள்ளது.

# கடத்தல் சம்பவங்களை தடுக்கும் அரசியல் முனைப்பு அரசிடம் இல்லை!

## ஆசிய மனித உரிமை பேரவை குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கடத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் உரிய முனைப்பு காட்டத் தவறியுள்ளது. கிளர்ச்சிகளை தடுக்கும் ஓர் தந்திரோபாயமாக இலங்கையில் பல ஆண்டுகளாக கடத்தல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை கடத்தல் சம்பவங்களை தடுக்கும் அரசியல் முனைப்பு அரசாங்கத்திடம் கிடையாது என ஆசிய மனித உரிமைப் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.**

பிரேம்குமார் குணரட்னம் மற்றும் திமுத்து ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்ட சம்பவமானது நீண்ட காலமாக நீடித்து வரும் ஓர் பிரச்சினையையே மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது என ஆசிய மனித உரிமைப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடத்தல் சம்பவங்களை தடுக்க இலங்கையின் பாதுகாப்பு தரப்பினர் உரிய ஆர்வம் காட்டத்தவறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிளர்ச்சி மற்றும் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளின் ஓர் கருவியாக கடத்தல்கள் இலங்கையில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இதனை பாராளுமன்றில் அறிவித்திருந்தார் எனவும் பலவந்தமான காணாமல் போதல்கள் மற்றும் சட்டவிரோத கடத்தல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் பிரகடனத்தில் கைச்சாத்திட முடியாது என அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்தார் என ஆசிய மனித உரிமைப் பேரவை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் யுத்தம் நிறைவடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் கடத்தல் சம்பவங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தாண்டி மாற்றுக் கொள்கையாளர்கள் அரசாங்க எதிர்ப்பாளர்களை ஒடுக்கும் தேவைகளுக்காகவும் அரசாங்கங்கள் கடத்தல்களைப் பயன்படுத்திக் கொள்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடத்தல் சம்பவங்களுக்கு தொடர்பில்லை என அறிவிக்கும் அரசாங்கம் அதனை தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் இதுவரையில் எடுக்கத் தவறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யார் கடத்தல்களை மேற்கொண்டாலும் அதனை தடுக்க வேண்டியது ஜனநாயக அரசாங்கமொன்றின் கடமையாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் அனேகமான கடத்தல்கள், காணாமல் போதல்கள், கொலைகள், பாலியல் வன்புணர்வுகள், கொள்ளைகள் என அரச கட்டுப்பாட்டு பகுதியில் நடத்தேறியுள்ளன.

இதனை யார் செய்தார்கள் என்ற தோறணைக்கு அப்பால் இவை அனைத்தும் இப்பகுதியில் நடந்தேறின என்பது உண்மையே.

அக்காலத்தில் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறிய அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆயினும் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் இதனை தட்டிக் கேட்டதாக சரித்திரமில்லை. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கியதா என்பதும் கேள்விக்குரியதே!

இந்தியா சென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தமிழர்களின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். ஆயினும் ஆட்சிக்காலத்தில் தமிழர் பகுதியில் நிகழ்ந்த துயரத்தை அவர் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆட்சியில் இருக்கும் போது மௌனிகளாக இருந்துவிட்டு பின்னர் ஊடகங்களுக்கு இப்படியான கருத்துக்களை வழங்குவதில் எவ்வித பயனும் இல்லை என்பதே உண்மை.

'கடத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இந்திய எம்.பிக்கள் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது

### அமைச்சர் பிரசாத் சமரசிங்க

(கொழும்பு)

இந்திய சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் இலங்கை விஜயம் தற்போதைய காலகட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் குறித்த ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் மக்களின் இனவாத பிரிவினர் கூறும் பொய்யான கூற்றுக்களை தவிர்த்து இலங்கையில் உண்மையில் என்ன நடக்கின்றது என்று இந்திய எம்.பிக்களினால் புரிந்து கொள்ள இந்த விஜயம் சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.சபையின் மனிதப் பேரவையில் இந்தியா எதிராக வாக்களித்தமைக்காக அதனுடனான உறவு எந்த வகையிலும் பாதிக்காதெனவும் அதனை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பலாலி ஆசிரியர் கலாசாலையை சொந்த இடத்தில் இயங்கவிடுங்கள்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்தி வருகின்றோம் என்று அரசு அடிக்கடி கூறி வருகின்றது. ஆனால், சொந்த இடத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை மீள இயங்குவதற்கு அனுமதிக்க முடியாது. வேறு இடத்தில் காணியைத் தேடிப் பிடியுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக விடுவிக்கப்படுவதாக அரசு மக்களை ஏமாற்றி வருவதனையே இது வெளிப்படையாகக் காட்டி நிற்கிறது. இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின். இவ்விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள 57 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கிய பலாலி ஆசிரியர் கலாசாலையை மீள இயக்குவதற்கு அனுமதி வழங்க முடியாது என்று வட மாகாண ஆளுநர் கூறியுள்ளார். இது வேதனை தரும் ஒரு விடயம்.

இதற்கு கல்வி அமைச்சு நிலத்தை வழங்கியுள்ளதாகக் கூறலாம். கல்வி அமைச்சு அரசின் ஒரு பகுதி. அது அரசின் வேண்டுகோளை நிறைவேற்றியே ஆக வேண்டும். கல்விப் பாரம்பரியத்தை சிறப்பாகக் கொண்டுள்ள வடக்கின் கல்விச் சிறப்புக்கு பலாலி ஆசிரியர் கலாசாலை ஆற்றிய பங்கு அதிகமானது.

எமது கல்வியை அழிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது உள்ளது. பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடுவதற்கான முயற்சியாகவே அதனைச் சொந்த இடத்தில் மீள இயக்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்றார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின். (அ-2)

## பல மில்லியன் ரூபா நாணயம் புதிதாக அச்சிடப்பட்டுள்ளது

பல மில்லியன் ரூபா நாணயம் புதிதாக அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு புதிதாக நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு வாரங்களில் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வங்கிக் கடன்களுக்கு மேலதிகமாக இந்த நாணயம் அச்சிடப்பட்டுள்ளது.

அதிகளவு நாணயத்தாள்கள் அச்சிடப்படுவதனால் நாட்டின் பணவீக்கம் மேலும் உயர்வடையக் கூடும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

பணவீக்கம் உயர்வினால் நாட்டின் பொருட்கள் சேவைகளுக்கான விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாணயத்தாள் அச்சீடு தொடர்பில் அரசாங்கமோ அல்லது மத்திய வங்கியோ உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதனையும் விடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)


## மரண அறிவித்தல்



### செல்வி சுரோமி ஆறுமுகநாதன்

(முன்னாள் ஆசிரியர் நெடுந்தீவு மகா வித்தியாலயம், பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை)

அல்வாய் மேற்கு மந்திலா வத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுரோமி ஆறுமுகநாதன் அவர்கள் 11.04.2012 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா ஆறுமுகநாதன் மற்றும் ரஞ்சினி தம்பதியரின் ஏக புத்திரியும், ரூபகாந்தன் (கனடா), பகிரதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுமிதாவின் (கனடா), மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரிகைகள் 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(சி/6375)

தகவல்:-
ஆ.பகீரதன் (சகோதரன்).

# கோபி அனானின் முயற்சி வெற்றி; சிரியாவில் போர் நிறுத்தம் அமுல்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெற்று வந்தது. கிளர்ச்சிக்காரர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே கடந்த ஆண்டு மார்ச்மாதம் தொடங்கி இதுவரை நடைபெற்ற உள்நாட்டுப்போரில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக ஐ.நா. கணித்துள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா.முன்னாள் தலைமைச் செயலாளர் கோபி அனான் மேற்கொண்ட முயற்சிக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

சிரியாவில் அனான் முன்மொழிந்த போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. அங்கு தாக்குதல்கள் எதுவும் நடைபெற்றதாக தகவல் இல்லை.

இது குறித்து சிரியா கூறுகையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி நாங்கள் நடந்து கொள்வோம். அதே நேரத்தில் தாக்குதல்கள் தொடுக்கப்படாமல் பதிலடி கொடுக்க உரிமையுண்டு என தெரிவித்தது. இதேபோன்று பிரதான எதிர்ப்புக் குழுவும் இராணுவம் தாக்கினால் பதிலடி தருவோம் என்று கூறியுள்ளது.

இதற்கிடையே சிரியா போர் நிறுத்த உடனீபடிக்கையின்படி நடந்து கொள்ளுமா என்று மேற்கத்தேய நாடுகள் வெளிப்படையாகக் கேள்வி எழுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆபிரிக்காவில் தந்தத்திற்காக யானைகள் வேட்டையாடப்படுவது அதிகரிப்பு



யானைகளின் தந்தங்களை வாங்கி விற்க சர்வதேச தடைகள் உள்ள போதிலும் ஆபிரிக்காவில் யானைகள் அதிகளவு வேட்டையாடப்படுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆபிரிக்காவின் கென்ய நாட்டில் சாம்புரு என்ற யானைகள் காணப்படும். கென்யாவில் ஒரு மாவட்டத்தில் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை 25 சதவீதம் குறைந்து விட்டதாக *Safe The Elephants* என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆசியாவில் அதுவும் குறிப்பாக சீனாவில் தந்தத்துக்கான தேவை அதிகமாக இருப்பதால் சட்டவிரோதமாக நடக்கும் தந்த வியாபாரம் அதிகரித்துள்ளது.

சீனர்கள் தங்கள் வீடுகளை அழகுபடுத்த தந்தத்தால் ஆன கலைப் பொருட்களை நாடுகின்றனர். இவர்களுக்குத் தேவைப்படும் தந்தங்கள் ஆபிரிக்க நாடுகளிடம் இருந்து வருகின்றன.


இதன் காரணமாக தந்தத்தின் விலை உயர்ந்துள்ளதுடன் தந்தத்தை விற்க கிடைத்துள்ள வாய்ப்பை வேட்டைக்காரர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனர். இதனால் ஆபிரிக்க யானைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாக போய்விடக்கூடிய வாய்ப்புள்ளதாக கூறுகின்றனர்.

அதேநேரம் சட்டவிரோதமாக நடக்கும் தந்த வியாபாரத்தை எதிர்ப்பதில் தாம் தொடர்ந்து உறுதியாக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. (அ-2)

# வடகொரியாவினால் செலுத்தப்பட்ட ஏவுகணை ஏவப்பட்ட மறுகணமே வெடித்து சிதறியது

## சர்வதேச நாடுகள் கடும் கண்டனம்

(பியாங்க்யாங்கி)



வடகொரியா நேற்று அதிகாலை மிகுந்த எதிர்பார்ப்போடு ஏவிய ஏவுகணை ஒன்று தோல்வியில் முடிந்தது.

செயற்கைக்கோளைச் சுமந்து சென்ற அந்த ஏவுகணை ஏவப்பட்ட சிறிது நேரத்திலேயே மஞ்சள் கடலில் துண்டுதுண்டாக சிதறி விழுந்தது. அந்த ஏவுகணை கவுண்ட்டவுன் முடிந்து புறப்பட்ட சில நொடிகளிலேயே தென்கொரியாவும் அமெரிக்காவும் இந்த ஏவுகணை தோல்வியில் முடிந்தது என்று செய்தியை வெளியிட்டன.

அதன் பின்னர் 'சில மணி நேரம் கழித்து வடகொரியா அரசும் தனது புதிய செயற்கைக்கோள் ஏவுகணை தனது சுற்றுவட்டப் பாதையில் சென்றடைவதில் தோல்வி கண்டதாக முறையாக தொலைக்காட்சி மூலம் அறிவிக்கப்பட்டது.

வடகொரியா தனது அணு ஆயுத ஏவுகணை செயற்பாடுகளால் உலக அளவில் எதிர்ப்பைச் சந்தித்தது.

மேலும் வடகொரிய ஏவுகணை நுட்பம் சர்வதேச விதிகளை மீறுவதாகவும் அதனை தடுக்க வேண்டும் என்றும் உலக நாடுகள் சில கோரி வந்தன.

இந்த நிலையில் ஐ.நா. சபையின் பாதுகாப்பு குழு இந்த ஏவுகணை ஏவப்பட்ட பின் ஏற்படப் போகும் நிலைமை குறித்து ஆராயவும் விவாதிக்கவும் வெள்ளிக்கிழமை பிற்பகல் அவசரக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. மேலும் தனது அணு ஆயுத முயற்சிகளை கைவிடவில்லை எனில் வடகொரியாவுக்கு உணவு உள்ளிட்ட பொருட்கள் சென்றடைவதில் தடை ஏற்படுத்தப்போவதாக வோஷிங்டன் அறிவித்திருந்தது.

இத்தகைய அரசியல் சூழலில் வடகொரியா தனது ஏவுகணை தோல்வி அடைந்ததாக நேற்று காலை முறைப்படி அறிவித்துள்ளது.

அத்துடன் இதற்கு சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆராய்ச்சி பணிகளுக்காக ரொக்கெட் செலுத்தப்பட்டதாக கொரிய அதிகாரிகள் கூறினர்.

இதற்கு கண்டனம் தெரிவித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள செய்தியில்,

இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வடகொரியா பதற்றத்தை ஏற்படுத்துகிறது. வடகொரிய மக்கள் பசியால் வாடும் போது அந்நாடு ஆயுதங்களில்செலவிட்டுபணத்தை வீணடிப்பதாக கூறியுள்ளது. (அ-2)

## தென்கொரிய தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி

தென்கொரியாவில் தேர்தல்களின் ராணி என்று பாராட்டப்படும் பார்க் கியுன்-கியுன்-ஹ்யி என்பவரின் சயோனுரி என்ற புதிய முன்னணிக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றது.

இதனால் கட்சித் தலைவியான பார்க் தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாகிறார். மக்களுக்கு வாக்களித்த அனைத்தையும் செய்து முடிப்போம் என்று ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார்.

நாடாளுமன்றிற்கு 229 இடங்களில் தேர்தல் நடந்தது. இதில் பார்க்கின் ஆளுங்கட்சிக்கு 152 இடம் கிடைத்தது. எதிர்க்கட்சியான DUP என்ற குடியரசு ஒருமைக் கட்சிக்கு 127 இடம்கிடைத்தது. (அ-2)

# பசுபிக் கடலின் நீர்மட்டம் உயர்கிறது; அவுஸ். நாடுகளுக்கு எச்சரிக்கை

பசுபிக் பெருங்கடலின் தென்மேற்கு பகுதியில் கடல் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் அவுஸ்திரேலியாவின் தெற்குப் பகுதியையும் அதையொட்டிய நாடுகளும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என குவின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

19 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இப்பகுதியின் கடலில் நீர்மட்ட அளவு உயர்வது பிற இடங்களை விட வேகமாக இருக்கின்றது.

உலக அளவில் கடல் நீர்மட்டம் 1880 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 1.5 மில்லி மீற்றர் அளவு தான் உயர்ந்து இருந்தது. ஆனால் டாஸ்மேனியா நகருக்கு அருகில் நடத்திய கணக்கெடுப்போ 1900 முதல் 1950 ஆம் ஆண்டுக்குள் இப்பகுதியில் ஆண்டுக்கு 4.2 மில்லி மீற்றர் அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்திருப்பதாக காட்டுகின்றது.

புவியின் வெப்ப சராசரி உயர்ந்த பனிப்பிரதேங்களில் பனி மலைகள் உருகத் தொடங்கியதை அடுத்து நீர்மட்டம் பசுபிக்கில் உயரத்தொடங்கியது. இதன் வேகம் அதிகமாக இருக்கின்றது.

துருவப் பிரதேசங்களில் மிகப்பெரிய பனிப்பாறைகள் உடைந்து உருகத் தொடங்கியிருப்பதை நேரிலேயே பார்க்க முடிந்தால் நீர்மட்டம் உயர எது காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்போது பருவநிலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கு காரணம் மனிதர்கள்தான் என்பதால் இந்த எச்சரிக்கை அரசுகளுக்கும் மக்களுக்கும் விடப்பட்ட எச்சரிக்கையாகவே கருதப்பட வேண்டும். (அ-2)



அரசுமுறைப்பயணமாக துருக்கி சென்றுள்ள வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவை ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கும் ஜனாதிபதி அப்துல்லா குல்லை படத்தில் காணலாம்.

# மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில் கட்டாருக்கு நான்காவது இடம்

வளைகுடாவில் நான்காவது மகிழ்ச்சிகரமான நாடாக கட்டார் தரப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளினால் வெளியிடப்பட்டுள்ள முதலாவது உலக மகிழ்ச்சிகர அறிக்கையின்மூலம் இது தெரியவந்துள்ளது.

மகிழ்ச்சிகரமான நாடுகளுக்கான உலகப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 156 நாடுகளில் கட்டார் 31 ஆவது இடத்தை வகிக்கின்றது. ஐக்கிய அரபு இராச்சியம் 17 ஆம் இடத்தை வகிப்பதுடன் சவுதி அரேபியாவும் குவைத்தும் முறையே 26, 29 ஆம் இடங்களில் உள்ளன.

இந்தப் பட்டியலில் டென்மார்க், பின்லாந்து , நோர்வே ஆகிய ஸ்கண்டிநேவிய நாடுகளும் நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளும் முன்னிலை வகிக்கின்றன.

டோகா, பெனின், மத்திய ஆபிரிக்க குடியரசு, சியாரா லியொன் ஆகிய நாடுகள் மகிழ்ச்சி குன்றிய நாடுகளாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் பிரகாரம் மத்திய கிழக்கில் யேமன், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளே மகிழ்ச்சி குன்றிய நாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

நாடுகளின் ஒட்டுமொத்த செல்வம் மற்றும் மக்களின் மனோ நிலை, சமூக உறவுகள், சுகாதார நலன் என்பன தரப்படுத்தலின் போது கவனத்தில் கொள்ளப்பட்டன.

செல்வம் கொழிக்கும் மகிழ்ச்சிகரமான நாடுகளே மகிழ்ச்சிகரமான நாடுகளாகத் திகழ்வதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. தொழில்வாய்ப்பின்மை துயரத்துக்கு காரணமாக அமைவதுடன் அபகரிப்பு மற்றும் பிரிவினை போன்றவற்றுக்கும் தூண்டுதலாக அமைவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒழுக்கசீலர்களாக இருப்பது மக்கலை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதுடன் எந்தவொரு நாட்டிலும் மகிழ்ச்சி பொங்குவதற்கு சிறந்த மனோ நிலைமையே மிகப்பெரிய காரணியாக அமைவதாகவும் அவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. (அ-2)

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கி கொள்ளும். - எமர்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அதோ! குப்பி விளக்கில் படித்த சிறுமி மரணமாகிறாள் இதோ! கடவுளர்களுக்காக கலவைகள் தயாராகின்றன

சுன்னாகத்தில் குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் அந்த விளக்கு தட்டுப்பட்டதில், அதில் எரிந்து பலியாகிப் போன சம்பவம் எங்களால் வெறும் செய்தியாகவே வாசிக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்த செய்திக்குள் இருக்கக் கூடிய சோகம், துன்பம் பற்றி சிந்திப்பதற்கு யாருமில்லை.

படிப்பதற்கு அவாக்கொண்ட ஒரு பிள்ளைக்கு மின்சார வசதி கிடைக்கவில்லை. அந்தப் பிள்ளை படிப்பதற்கு மின்சார வசதி கிடைத்திருந்தால் அந்தப்பிள்ளை கல்வியில் சாதனை படைத்திருக்கும் என்பது மட்டுமல்ல, அதன் உயிரும் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது! ஏழைகளின் வாழ்வியல் துன்பங்கள் வெளிவராதவையாகிப் போவது பெரும் சோகம்.

சுன்னாகத்தில் ஒரு சிறிய வீட்டில் குப்பிவிளக்கில் படித்த சிறுமி எரிந்து பலியாகிப் போக மறுபுறத்தில் வானுயர்ந்த கோபுரங்கள், அதற்கு குடமுழுக்குகள் நடக்கின்றன.

அதேநேரத்தில் புதுப் புது இடங்களில் சுருவங்கள் வைக்கும் போட்டிகளும் நிறையவே நடந்து கொள்கின்றன.

புத்தர் சிலையை நிர்மாணிக்கும் போது எதிர்க்கும் நாங்கள் புதுப் புதுப் இடங்களில் திட்டமிட்டு மதக்குறியீட்டுச் சின்னங்களை ஸ்தாபிப்பது தொடர்பில் நாம் அக்கறை அற்றவர்களாக இருக்கின்றோம்.

இந் நிலைமை எதிர்காலத்தில் மதக் கலவரங்களை ஏற்படுத்துவதற்கான அத்திபாரமாகும். தனியார் காணியாயினும் அரச காணியாயினும் புதிதாக பன்சாலை கட்டுதல், ஆலயம் அமைத்தல், தேவாலயம் கட்டுதல், மசூதிகள் நிர்மாணித்தல் என்பன தடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு மத ஸ்தலங்கள் புதிதாக அமைப்பதாயின் அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு மிகவும் இறுக்கமான சட்டதிட்டங்களை கொண்டுவரவேண்டும்.

குறிப்பாக உள்ளூராட்சி சபைகள் விழிப்பாக இருக்கும் பட்சத்தில் அதிரடியாகத் தோன்றும் சுருவங்களை தடுக்க முடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் உறவுகள் தங்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் போது, நாங்களோ மதத்தால் பிரிவு பட்டு தத்தம் சமயங்களை நிலைநிறுத்த முற்படுகின்றோம்.

மனித தேவைகள் எத்தனையோ இருக்கும் நேரத்தில் ஏற்கெனவே இருக்கக் கூடிய ஆலயங்களில், தேவாலயங்களில் வழிபடுவதற்கு ஆட்கள் இல்லாமல் இருக்கும் போது, புதிது புதிதாகதெய்வச் சிலைகளை, சுருவங்களை அமைத்து எதைத் தான் நாம் சாதிக்கப் போகின்றோம்?

ஓ இறைவா! அதோ ஒரு ஏழைச்சிறுமி வாழ வேண்டிய வயதில் எரிந்து கருகிக்கிடக்கிறாள்.

ஆனால் இங்கோ சீமெந்தும் மண்ணும் கலவையாக்கப்படுகின்றன கடவுள்களைக்கட்டுவதற்கு. எப்படி எங்கள் சமூகம் எழுச்சி பெறும்?

# மட்டக்களப்பில் தொடர் வறட்சி; மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக இருந்துவரும் கடும் வெயில் கலந்த காலநிலை காரணமாக சில பிரதேசங்களில் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத நிலையில் மிகவும் வறுமையில் இந்தப் புத்தாண்டை வரவேற்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

செங்கலடிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஈரக்குளம் கிராமசேவையாளர் பிரிவின்கீழ் உள்ள குன்னாமடு பிரதேசமக்களே இவ்வாறு கவலை தெரிவித்தனர்.

தாம்சேனைமற்றும்கூலித்தொழிலை மேற்கொண்டு வருவதாகவும் தொடர்ச்சியாக நிலவும் கடும் வெயில் கலந்த காலநிலை காரணமாக தமது தொழில் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக அந்தமக்கள் தெரிவிக்கின்றனர். தண்ணீர் இல்லாததன் காரணமாக தாம் தமது சேனைப்பயிர்ச் செய்கையை கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக இந்தச் சித்திரைப் புத்தாண்டைத்தமதுகுடும்பத்துடன்மகிழ்வுடன் கொண்டாடமுடியாதநிலைஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் தினக்கூலிக்காவது சென்று வந்தபோதிலும் கடும் வெயில் காரண மாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாததன் காரணமாக தினமும் தமது குடும்பத்தினைக் கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இது தொடர்பில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு ஒரு தொகுதி உணவுப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் பிரதியமைச்சரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் இந்த உணவுப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன. (அ-2)

# உயர்கல்வி சான்றிதழ்களை சர்வதேச தரமிக்கவையாக மாற்ற நடவடிக்கை

## உயர்கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அநேகமான உயர் கல்வி நிறுவனங்களின் சான்றிதழ்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடையாது என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது வழங்கப்படுகின்ற அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங் களின் உயர்கல்விச் சான்றிதழ்களை சர்வதேச தரமிக்கவையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச் சின் செயலாளர் பேராசிரியர் சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த நாட்டிலுள்ள உயர்கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில், அவ்வாறான கல்வி முறைமைகளை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ-2)

# தொல்பொருட்களை களவாடும் நபர்களுக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

தொல்பொருட்களைக் களவாடும் நபர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

புதையல்கள், தொல்பொருட்கள் ஆகியவற்றைக் களவாடும் நபர்களுக்குக் கண்டிப்பாகச் சிறைத்தண்டனை விதிக்கக் கூடிய வகையில் சட்டமொன்றை அமுல்படுத்தும் நோக்கில் நகல் சட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக தொல் பொருள் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளுக்குநாள் தொல்பொருட்களைக் கள்வாடும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகவும் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொல்பொருட்களைக் கொள்ளையிடும் நபர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத அபராதமும் ஓராண்டுச் சிறைத்தண்டனையும் ஒரே தடவையில் இரண்டு தண்டனையும் விதிக்க சட்டத்தில் இடமுள்ளது. இந்த ஆண்டில் இதுவரையில் தொல்பொருட்கள் கொள்ளையிடப்பட்ட 30 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (அ-2)

# உற்சவம்

நுணாவில் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று உற்சவம் நிறைவடையவுள் ளது. (அ-3-29)

# கைக்குண்டு தாக்குதலில் 10 பேர் காயம்


எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்மில்ஆர பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் எட்டு ஆண்கள் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் தனிப்பட்ட தகராறு காரணமாகவே நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றியவர் என்வும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இறுதிவரைக்கும் போராடு



கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் இல்லை என்பதை பல தவங்களுக்குப் பின்பு புரிந்துகொண்டேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவன் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

நேர்மையானவர்களாக இருந்தும் இலட்சியத்தைப் பின்பற்ற முடியவில்லை என்றால் அது நமது பலவீனத்தாலேயே ஆகும். இலட்சியத்தை அடைய இறுதி வரை போராட வேண்டும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள். பொறாமையை விலக்கினால் இதுவரையிலும் செய்யாத மகத்தான செயல்கள் அனைத்தும் செய்து முடிப்பீர்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற உலகம் எவ்வளவு பெரியதோ அந்த அளவுக்கு உங்கள் இதயத்தையும் விரிவாக்குங்கள்.

உன்னால் ஒருவருக்கும் உதவி செய்யமுடியாது. ஆனால் சேவை செய்ய முடியும். கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய். உனக்கு அப்படித் தொண்டு செய்யும் பாக்கியம் இருந்தால் ஆண்டவனுக்கே நீ தொண்டு செய்தவனாகிறாய்.

# பச்சிலைப்பள்ளி பி.செ.பிரிவில் விரைவில் மீள்குடியேற்றம்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் முகமாலை இத்தாவில் பகுதியில் விரைவில் மிள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளதுடன் இதுவரை மீள்குடியேற்றத்திற்காக சுமார் 370 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இத்தாவில் முகமாலை வேம்பொருகேணி ஆகிய பகுதிகளில் மக்கள் இதுவரை மீள் குடியேற்றம் செய்யப்படவில்லை. இந்த நிலையில் தற்போது மிள்குடியேற்றத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைய இத்தாவில் பகுதியை சேர்ந்த 91 குடும்பங்களும் முகமாலை பகுதியை சேர்ந்த 131 குடும்பங்களும் வேம் பொருகேணியை சேர்ந்த 148 குடும்பங்களும் தற்போது வரை மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை இந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து கடந்த 10 ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து கண்ணிவெடியகற்றல் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. (அ)

## பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

மு/ விசுவமடு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. எனவே, இதில் பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

# கடத்தல் சம்பவங்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை

### உயர்ஸ்தானிகர் திசரசமரசிங்க கூறுகிறார்

கடத்தல் சம்பவங்களுக்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் குற்றம் சுமத்துவதனைப் போன்று இலங்கையில் இரகசிய பொலிஸார் கடத்தல்களில் ஈடுபடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாரும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரும் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரேம்குமார் குணரட்னத்தை காவற்றுறையினர் கைது செய்யவும் இல்லை அவரை விடுதலை செய்யவும் இல்லை என திசரசமரசிங்க தெரிவித்துள்ளார்.

அராங்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# முகமாலை பகுதியில் விரைவில் கண்ணிவெடிகளை அகற்றுங்கள்

### அப்பகுதி மக்கள் கோரிக்கை

முகமாலைப்பகுதியில் நடைபெற்று வரும் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டை துரிதப்படுத்துவதடன் அதனை தொடர்ச்சியாக கண்காணிக்குமாறு முகமாலை பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் கண்ணிவெடி அபாயம் குறை ந்த பகுதிகள் என இனங்காணப்பட்ட பகுதிக ளான சி.ஆர். தம்பையாப்பிள்ளை தென்னந் தோப்பு மற்றும் ஏ9 வீதிக்கு வடக்கு பக்கமாக உள்ள பகுதிகளிலும் அடுத்த கட்டமாக கண்ணி வெடியகற்றல் பணிகளை மேற்கொள்ளு மாறு இவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தற்பொழுது நடைபெற்று வரும் கண்ணிவெடியகற்றல் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக ஆய்வுக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பச்சிலைபள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன் குறித்த பகுதியில் கண்ணிவெடியகற்றல்செற்பாட்டில் ஈடுபட்டு வரும் கலோரஸ்ட் நிறுவனப் பிரதிநிதி மற்றும் பளைப் பிரதேச இராணுவ உயர் அதிகாரிகள், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலர் மற்றும் முகாமைப் பகுதியின் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரிடமும் பொதுமக்கள் தரப்பில் இந்த வேண்டு கோள் விடுக்கப்பட்டதாக முகமாலை பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ-2)

# பிரேரணை நிறைவேறினால் என்ன? மக்களுக்கு செய்ய வேண்டியதை செய்வோம்

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

எதிர்வரும் ஜூன் மாதமளவில் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் 20 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் மேலும் முன்னேற்றங்களை வெளிக்காட்டுவோம் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் விவகாரம் குறித்த ஜனாதிபதியின் தூது வருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரா பிரேரணை கொண்டு வந்தாலும் வரா விட்டாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்ய வேண்டியதை அரசாங்கம் செய்யும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வருடம் ஜூன் மாதமளவில் ஜெனீவாவில் ஆரம்பமாக்வுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 20 ஆவது கூட்டத்தொடருக்கான தயார்ப்படுத்தல்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து லேும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 20 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் சர்பில் தூதுக்குழுவினர் கலந்து கொள்வார்கள்.

அதன்போது யுத்தத்தின் பின்னரான இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜெனீவா மனித உரிமை பேரவைக்கு அறிவிப்போம்.

அதாவது யுத்தத்துக்கு பின்னரான இலங்கையில் பல முன்னேற்றங்களை நாங்கள் வெளிப்படுத்தி வருகின்றோம். மேலும் பல முன்னேற்றங்களை நாங்கள் வெளிப்படுத்துவோம். அந்த வகையில் எதிர்வரும் ஜூன் மாதமாகும் போது பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி அவற்றை ஜெனீவாவில் அறிவிப்போம்.

ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வந்துநிறைவேற்றப்பட்டது. அவ்வாறு பிரேரணை கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் நாங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன செய்ய வேண்டுமோ அதனை செய்வோம். (அ-2)

# மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களை வெளிவிவகார அமைச்சு முன்னெடுக்கும்

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

எவர் எதனைக் கூறினாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் எது நல்லதோ மற்றும் எது உகந்ததோ அதனை வெளிவிவகார அமைச்சு முன்னெடுக்கும். அது தொடர்பில் எவரும் கருத்துக் கூறுவதற்கான ஜனநாயக உரிமை நாட்டில் உள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதிநிதிகளின் வருகைக்கு அரசாங்கம் இடமளிக்க கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளமை குறித்து கேட்டபோதேவெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்திய எதிர்க்கட்சி தலைவியின் தலைமையில் அந்நாட்டின் சர்வகட்சி எம்.பிக்கள் குழுவினர் இலங்கைக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கை வரும் இந்திய பிரிதிநிதிகள் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லவுள்ளதுடன் அபிவிருத்தி வேலைத் திட்டங்க ளையும் பார்வையிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமானது இந்திய எம்.பிக்களின் விஜயத்துக்கு இடமளிக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளது.

அந்த வகையில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

இந்திய சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் இலங்கை விஜயமானது இராஜதந்திர ரீதியில் இடம்பெறும் முக்கியமான விஜய மாகும். வெளிவிவகார அமைச்சு என்ற வகையில் அதனை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

அதாவது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் விடயங்களை வெளிவிவகார அமைச்சு செய்யும். அதனை தவிர்க்க முடியாது. எவரும் எந்த அமைப்பும் இதனை எதிர்ப்பதற்கு ஜனநாயக ரீதியில் உரிமையுள்ளது. அதனை நாங்கள் மறுக்கவில்லை.

ஆனால் எவரும் எதிர்க்கின்றனர் என்பதற்காக நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் விடயங்களை நாங்கள் செய்யாமல் இருக்க முடியாது. எவரும் விரும்பலாம் விரும்பாமல் இருக்கலாம்.

ஆனால் எதனை செய்ய வேண்டுமோ அதனை வெளிவிவகார அமைச்சு செய்யும் என்றார். (அ-2)

# போலியான உறவை ஏற்படுத்தி பொருட்களை திருடும் கும்பல்

### புகையிரத திணைக்களம் எச்சரிக்கை

பண்டிகைக்காலத்தில் புகையிரதத்தில் பயணம் செய்வோர் இனந்தெரியாத நபர்களால் வழங்கப்படும் உணவுப் பண்டங்களை உட்கொள்ள வேண்டாமென புகையிரத திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புயணிகளின்பாதுகாப்பைகருத்திற்கொண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு பணிகளுக்காக மேலதிக ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்வுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனந்தெரியாத நபர்களுடன் போலியான நட்புறவை ஏற்படுத்தி அவர்களுக்கு உணவு, பானங்களை வழங்கி மயக்கமடையச் செய்து ஆபரணங்கள், பணத்தை கொள்ளையிடும் திட்டமிட்ட கும்பல்கள் இயங்கி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புகையிரதத்தில் பயணம் செய்யும் போது பயணிகள் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டுமெனவும் புகையிரத திணைக்களத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ராஜஸ்தானை வீழ்த்தி கொல்கத்தா வெற்றி

ஐந்தாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் 15-வது லீக் ஆட்டத்தில் ராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றுமோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ராகுல் ராவிட் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய அணித் தலைவர் ராகுல் ராவிட் 26 ஓட்டங்களும் அஜின்கியா ரகானே 19 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய அசோக் மெனாரியா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்ற

**இன்றைய போட்டி:**
இரவு 8 மணிக்கு புனேயில் நடைபெறும் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் அணிகள் மோதுகின்றன.


பின்பு களமிறங்கிய கோஸ்வாமி 24 ஓட்டங்களும், ஓ வைஸ் ஷா 31 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 131 ஓட்டங்கள் எடுத்தது. பிராட் ஹோட்ஜ் 12 ஓட்டங்களுடனும், ஜோகன் போத்தா 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து 132 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு கொல்கத்தா அணி பதிலெடுத்தாடியது. இதில் கலிஸ் -காம்பீர் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

ஆனால் காம்பீர் 11 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மற்றும் கலிஸ் 31, பிஸ்லா 29 ஓட்டங்களும் பெற்று அணியை மீட்க கொல்கத்தா அணி 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சகிப் அல் ஹசன் தெரிவானார்.



## ஐ.பி.எல். மீது இங்கிலாந்துக்கு பொறாமை - கெவின் பீட்டர்சன்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் மீது இங்கிலாந்தில் பொறாமை ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டு கிரிக்கெட் வீரர் கெவின் பீட்டர்சன் கூறியுள்ளார்.

டெல்லி டேர்டேவில்ஸ் அணியில் இடம் பெற்றுள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது, இங்கிலாந்தில் ஐ.பி.எல். தொடர்பாக எதிர்மறையான கருத்துக்கள் எழுந்துள்ளன.

இதற்கு பொறாமைதான் காரணம். இங்கிலாந்து பத்திரிகைகள் ஐ.பி.எல்லுக்கு எதிரான செய்திகளையே அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. இது கவலையளிக்கும் விஷயம் தான் என்று பீட்டர்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் கிரிக்கெட் பத்திரிகையான விஸ்டன் சமீபத்தில் ஐ.பி.எல். கிரிக்கெட்டை குறை கூறியிருந்தது. ஐ.பி.எல். போட்டியால் சர்வதேச டெஸ்ட் போட்டிகள் பாதிக்கப்படுகிறது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவில் இந்திய அணி டெஸ்ட்போட்டிகளில் தொடர்ந்து தோல்வியடைந்ததற்கு ஐ.பி.எல்லும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். 2ஆவது மிகப்பெரிய வெற்றி

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தின ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. ஐ.பி.எல்.போட்டி வரலாற்றில் ஒரு பெரிய அணியின் எண்ணிக்கையை பதிலெடுத்தாடி வெற்றி பெறுவது என்பது இது இரண்டாவது முறையாகும்.

2008ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸுக்கும் டெக்கான் சார்ஜர்ஸுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ராஜஸ்தான் அணி, டெக்கான் அணியின் 214 என்ற எண்ணிக்கையை பதிலெடுத்தாடி 217 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றிபெற்றது. இதுவே இன்றுவரை அதிகபட்ச சேசிங்காக உள்ளது.

இதுபோலவே சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பெரிய ஓட்ட எண்ணிக்கையை பதிலெடுத்தாடுவது இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்பு 2010 இல் தர்மசாலவில் நடைபெற்ற போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 192 ஓட்டங்கள் குவித்தது.

இதை அருமையாக பதிலெடுத்தாடிய சென்னை 4 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

# என்து அனுபவங்களை புத்தகமாக எழுதப் போகிறேன்-யுவராஜ் விவரிப்பு



புற்றுநோயால் அவதிப்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங், தனது அனுபவங்களை புத்தகமாக எழுதப் போவதாக தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் மூன்று கட்ட சிகிச்சைக்கு பின்னர் கடந்த திங்களன்று நாடு திரும்பினார்.

சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய யுவராஜ் சிங் ஊடகங்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

என்னைப் போன்ற ஒருவனுக்கு இது போன்ற நோய் தாக்கியது மிகவும் அதிர்ச்சியாகவே இருந்தது. நான் காலை முதல் மாலை வரை விளையாடிக் கொண்டே இருந்தவன்.

அதிர்ஷ்டவசமாக ஆரம்ப கட்டத்திலேயே புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் சிகிச்சையை ஆரம்பிக்க 2 மாதம் தாமதமாகிவிட்டது. புற்றுநோயை எதிர்கொண்டது சவாலாகத்தான் இருந்தது.

என்னைப் போலவே புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சைக்கிள் சம்பியன் லேன்ஸ் ஆம்ஸ்ரோங்கைத்தான் எனது முன்மாதிரியாக நினைத்துக் கொண்டேன்.

அவர் புற்றுநோயை வென்றதோடு மீண்டு வந்து, சர்வதேச அளவில் மீண்டும் தன்னை சம்பியனாக நிலைநிறுத்தியவர்.

முழு அளவில் மீண்டு வர மேலும் இரண்டு மாதங்கள் ஆகலாம். தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிகளை பார்க்கும் போது மிக வருத்தமாக இருந்தது.

நாம் மீண்டும் எப்போது விளையாடு வோம் என்று ஏக்கமாக இருந்தது.

வெளியுலகத்திற்கு வரவே சங்கடமாக இருந்தது. தற்போது புற்றுநோய் போய்விட்டது. ஆனாலும் அதன் காயம் இன்னும் இருக்கிறது.

சகவீரர்கள் எனக்கு மிக ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருந்தனர். எனது இந்த அனுபவங்கள் குறித்து புத்தகம் எழுதவும் திட்டமிட்டுள்ளேன்.

புற்றுநோய் சிகிச்சையின் போது நான் பலமிழந்து கண்ணீர்விட்ட போதெல்லாம் மிக மிக ஆதரவாக இருந்தவர் எனது தாயார் தான். இப்போது உயிரோடு இருப்பதற்கே மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

2 மாதங்களில் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேன் என்று நம்பிக்கை தெரிவித்த யுவராஜ், சிகிச்சை காரணமாக அணியில் இடம்பெறவில்லை என்பதில் வருத்தம் என்றும் கூறினார்.

# ஜனாதிபதியின் மனித உரிமைச் செயற்பாடுகள்...

மாறுவார் என்று நான் நினைக்கவேயில்லை.

80 களில் நடந்த பல்வேறு மனித உரிமை மீறல்களில் எங்களோடு இணைந்து நின்று குரல் கொடுத்தவர் மகிந்த ராஜபக்ஷ என்பது பலருக்குத் தெரியாத செய்தி.

இடதுசாரிகள் வலுவாக இருந்தபோது அவரோடு தன்னை அடையாளப்படுத்தி கொண்டார்.

பின்னர் 1988இல் சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்க கொல்லப்பட்டார். அப்போது இலங்கை சுதந்திரக் கட்சியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது.

அந்த வெற்றிடத்தை மிகச் சாதுரியமாக பயன்படுத்திக் கொண்டார்.

அதில் இருந்துதான் மகிந்த ராஜபக்ஷ மாறிவிட்டார்.

ஜே.வி.பி.கிளர்ச்சிக் காலகட்டத்தில் காணாமல் போன சிங்கள இளைஞர்களுக்காக ராஜபக்ஷ குரல் கொடுத்தார்.

ஆனால் அவருக்குள் ஒளிந்திருந்த சிங்கள தேசியவாதியை அப்போது எங்களால் அடையாளம் காணமுடியவில்லை.

அரசியல் தலைவராக உருவான பின்னர், அவர் பௌத்த துறவிகள், பௌத்த மதச் சடங்குகள் என்று தன்னை மாற்றிக் கொண் டார்.

மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டு போலியாக தன்னை ஒரு மனித உரிமை ஆர்வலராகக் காட்டிக் கொண்ட ராஜபக்ஷவின் கடந்த கால மனித உரிமைச் செயற்பாடுகள் போலியானவை.

அது மக்களையும் அவரோடு பணியாற்றிய என்னைப் போன்ற மனித உரிமையாளர்களை ஏமாற்றிய செயல்.

**கேள்வி:** ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் நீங்கள் என்ன பேசினீர்கள்?

**பதில்:** இலங்கைக்குள் பேசமுடியாததை ஜெனிவாவில் பேசினேன்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நான் மனித உரிமைகளுக்காக இலங்கையிலும் சர்வதேச அளவிலும் குரல் கொடுத்து வருகிறேன்.

இப்போது மனித உரிமைகளைக் கொன்ற ஜனநாயகமற்ற நாடாக இலங்கை இருக்கிறது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை வைத்திருக்கும் ராஜபக்ஷவுக்கு எதிராக இலங்கையில் எதிர்க் கட்சி என்ற ஒன்றே இல்லை.

இலங்கைக்குள் ஊடகவியலாளர்கள் எதிர்க் கட்சிகள்,மனித உரிமை ஆர்வலர்கள் என எவருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலையில் எல்லோருமே அமைதியாகி விட்டனர்.

அங்கு நடத்தப்பட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக எதையும் பேசமுடியாத நிலையில், ராஜபக்ஷ அரசு எதிர்க்கட்சிகளை கட்டுப்படுத்தி, ஊடகங்களைத் தாக்கி வட பகுதி தமிழ் மக்களை எப்படியெல்லாம சித்திரவதை செய்கிறார்கள் என்று பேசினேன்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக கேள்வி எழுப்பினேன். நாட்டுக்கு உள்ளும் எவரும் பேசக் கூடாது.

நாட்டுக்கு வெளியேயும் எவரும் பேசக்கூடாது என எதிர்பார்க்கிறார்கள்.இது எப்படி சரியாகும்.

**கேள்வி:** உங்களுடைய காலை உடைப்பேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா கூறியிருக்கிறாரே?

**பதில்:** கை கால்களை உடைப்பது, ஆட்களைக் கடத்துவது, அரச ஊழியர்களை மரத்தில் கட்டி வைப்பது இதெல்லாம் அவருடைய தொழில்.காரணம் அவர் அரசியல் வாதியல்ல.தலைமறைவு ஆயுதக் குழுக்களோடு தொடர்புடையவர்.

இதுபோன்ற சட்டவிரோத மனிதர்களைக் கொண்டுதான், ராஜபக்ஷ ஆட்சி செய்து வருகிறார்.

போருக்கு எதிராகவும் இனப் படுகொலைக்கு எதிராகவும் பேசியவர்கள் கொல்லப்பட்டார்கள். காணாமல் போனார்கள். பலர் பயந்து நாட்டைவிட்டுவெளியேறினார்கள்.

கடைசியில் எல்லா நியாயமான குரல்களும் ஒடுக்கப்பட்டு விட்டன.

இப்போது அங்கு இருப்பவர்கள் எல்லாம் மேர்வின்சில்வாவும்,விமல் வீரவன்சவும், இவர்களை வழி நடத்தும் ராஜபக்ஷ போன்றவர்களும்தான்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை மக்களின் மனித உரிமைகளுக்காக எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**கேள்வி:** போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், வட பகுதித் தமிழ் மக்களின் நிலை எப்படி உள்ளது?

பதில்: யுத்தம் முடிந்து ஆண்டுகள் பல கழிந்த விட்டாலும் அது மக்களுக்கு புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கி விட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிம்மதி கிடைக்கவில்லை.

உறவு, நலம், வீடு என ஒட்டுமொத்த வாழ்வையும் அவர்கள் இழந்துவிட்ட நிலையில், அவர்களுக்கு நிவாரணங்களும் இல்லை.

அரசோ தன்னார்வக் குழுவோ அடுத்த வேளைக்கு ஏதாவது தரமாட்டார்களா என்று தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

வட பகுதியில் 80 சதவீத தமிழ்க் குடும்பங்களை பெண்கள்தான் தலைமை ஏற்று நடத்துகிறார்கள்.

காரணம் ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள ஆண் கொல்லப்பட்டு விட்டார்.

அல்லது காணாமல் போய்விட்டார், அல்லது, தடுப்பு முகாமில் உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புதிய முகாம்களை உருவாக்கி இருக்கிறார்களே தவிர 23 ஆண்டுகளாக வைத்திருக்கும் பழைய முகாம்களைக் கூட கலைத்துவிட வில்லை.

அப்புறம் எப்படி நிலைமை மாறிவிட்டதாக சொல்ல முடியும்?

இப்படி நிமல்கா பெர்ணான்டோ தனது செவ்வியில் தெரிவித்துள்ளார். (ரு-8,11)

## கிளிநொச்சியில்...

களில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தேடுதல் நடவடிக்கைகள் காரணமாக பல ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## இலங்கை அருகே...

சுனாமி ஏற்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

புவி 12 தட்டுக்களால் அமைந்துள்ளது. இந்த நிலையில் தற்போது புதிதாக 13-வது புவித்தட்டு ஒன்று உருவாகி வருவதாக இலங்கையின் புவியியற்துறை பேராசிரியர் கபில தஹநாயக்க தெரிவித்துள்ளார். இது இலங்கைக்கு அருகே உருவாகியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-8,11)

# இலங்கையின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட இந்திய குழுவின் விஜயம் அர்த்தமற்றது

## ஜெயாவின் முடிபே சரியானது -மனோ

(கொழும்பு)

இந்தியா கட்டிதரும் வீடுகள் பற்றி ஆராய்வதுதான் இந்திய தூதுக்குழுவின் நோக்கம் என்றால் அவர்கள் இலங்கை வருவது அர்த்தமற்றது என்றும் இது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முடிபு சரியானது என்றும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனது கட்சியின் எம்.பி. ரபி பெர்னார்டை இலங்கை வரவுள்ள இந்திய நாடாளுமன்ற தூதுக் குழு விலிருந்து விலக் கொண்டுள்ளார்.

இந்திய எம்பிக்கள் முழுக்க முழுக்க இல ங்கை அரசின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டு மாத்திரம் செயல்படுவார்கள் என்றும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய அரசு கட்டிவருவதாக சொல்லப்படும் வீடுகளை பற்றியும் ஐந்து ஆண்டுகளாக ஹட்டன், டிக்கோயாவில் கட்டும் மருத்துவமனை பற்றியும் ஆராய்வதுதான் அவர்களது நோக்கம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த அடிப்படையில் இதற்காகத்தான் இந்திய நாடாளுமன்ற குழு இலங்கை வருகிறது என்றால் அதைவிட அவர்கள் வராமலேயே இருக்கலாம்.

இந்த அடிப்படையில் முதலமைச்சர் ஜெயலலிதா எடுத்த முடிபு சரியானது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில் ;



கடந்த முறை இலங்கை வந்த இந்திய நாடா ளுமன்ற தமிழ் நாட்டு எம்.பிக்களின் தூதுக்குழுவிற்கு திராவிட முன்னேற்ற கழகத் தலைவரின் மகள் கனிமொழி எம்.பி. அதிகாரபூர்வமற்ற தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ந-8 ; 11)


அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வ-து)
வட்டுக்கோட்டை/ விசுவமடு

### விசேட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குரிய வைப்புப் புத்தகம், தேசிய அடையாள அட்டை போன்ற சான்றாதாரங்களுடனும் உரித் தாளருடனும் விசுவமடு தபாற் கந்தோருக்கு முன்புறம் அமைந்துள்ள டாக்டர் V. சுந்தர மூர்த்தியின் "அரவிந்த் கிளினிக்" என்ற வைத்திய நிலையத்திற்கு 2012 ஏப்ரல் 16, 17, 18, 19, 20 ஆகிய திகதிகளில் நேரில் வரவும். காலை 9.00 - பி.ப. 4.00 மணி வரை.

- நிர்வாகி

(8149)


## இந்தியக் குழுவின் ...

சுவராஜ் தலைமையிலான இக் குழுவில் இடம்பெறுவர்களின் பெயர்கள் அதிகாரபூர்வமாக முதலில் வெளியிடப்படாத போதிலும், கடந்த வாரமே இக் குழுவில் இடம்பெறவுள்ள உறுப்பினர்கள் சிலரின் பெயர்கள் வெளிவந்திருந்தன. இக் குழுவில் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் குரல் எழுப்பிவரும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.ராஜா மற்றும் கணேசமூர்த்தி ஆகியோர் இடம்பெறவில்லை. இலங்கை விவகாரங்கள் குறித்து ஓரளவு அறிந்து கொண்டவரும், இவ்விடயத்தை பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் கையாண்டு வருபவருமான வெங்கையா நாயுடு மற்றும் அக்கட்சியில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ள ஜஸ்வந்த் சின்ஹா ஆகியோருக்கு இக் குழுவில் இடம் கிடைக்கவில்லை.

அத்துடன், இக்குழுவின் இலங்கை விஜயத்திற்கான நிகழ்சிநிரல் கூட, இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்திற்கு ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற பணிகளுக்காக இந்தியா வழங்கிய 500 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்ட விதம் குறித்து ஆராய்வதே இக்குழுவின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

போரின்போது இடம்பெயர்ந்து தடுப்பு முகாம்களில் உள்ள மக்களைச் சந்திப்பது, சிங்கள குடியேற்றங்கள் மற்றும் அரசியல் தீர்வு போன்ற விவகாரங்கள் குறித்து இக் குழுவின் விஜயத்திற்கான நிகழ்ச்சி நிரலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தாத வகையிலேயே இக் குழுவின் விஜயத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு பின்னணியிலேயே இக் குழுவில் அ.தி.மு.க இடம்பெறாது என அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான ஜெயலலிதா திடீரென அறிவித்தார். தமிழக முதலமைச்சரின் இந்த அறிவிப்பு இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள ஏனைய கட்சிகளுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் மறுபரீசிலனை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-8,11)

## மக்களின் ...

நிலைமைகள் மேலும் மோசமாகி விடும்.

அரசு தனக்குத் தேவையேற்படும் போதெ[illegible]லாம் நெருப்பு வட்டிக்கு சர்வதேசத்திடம் க[illegible] வாங்குகின்றது. ஆனால் மக்களிடமிரு[illegible] பணத்தை சுரண்டியே கடன் தொகையை அது செலுத்துகின்றது.

இலங்கையில் நாளுக்கு நாள் ரொக்கெட் வேகத்தில் பொருட்களின் விலை அதிகரிக்கிறது.

மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டையாகவே மகிந்த அரசு செயற்படுகின்றது.

இந்த அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராட முன்வர வேண்டும்.

மகிந்த அரசின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க தமிழ்,சிங்கள மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்றார் விக்கிரமபாகு கருணாரட்ண. (ந-8;11)


கண்ணீர் அஞ்சலி

யுவராஜா நிஜந்தன் (வேலோஜன்)

மண்ணில்
08. 03.1990



உலகில் நீயும் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே

விண்ணில்
13.04.2012

உன் பிரிவால் துயருறும்
செல்வமதன் (மாமா)
077-0437907.

(சி-6376)



நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள்
மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081



பழைய மாணவர் சங்கம்
யா/ யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

### பொதுக்கூட்டம் - 2012

இடம் : கல்லூரி மண்டபம் தெல்லிப்பழை
நாள் : 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

01. மௌனவணக்கம்
02. தலைவர் உரை
03. போசகர் உரை
04. செயலாளர் அறிக்கை
05. பொருளாளர் அறிக்கை
06. பிரேரணைகள் ஆய்வு
07. ஏனைய விடய ஆய்வு
08. நன்றியுரை
09. புதிய நிர்வாகசபைத் தெரிவு
10. மதிய போசன விருந்து

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

N.B. பாலேந்திரன்
செயலாளர்.

(8170)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.